1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 13-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு சித்திரைமாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை— பிரதிசதம் 10

## இரட்சகரின் ஆறுவதுவசனம்

யேசுக்கிறீஸ்துநாதர் மன்னுயிரை மீட்பதற்காகப் பாடுபட்டுத் தம்முயிரைத் தியாகஞ் செய்ததைத் திருச்சபை பெரியவாரத்திலே விசேஷவிதமாய் நினைவுகூர்ந்து தியானிக்கின்றது. பத்தொன்பதுநூற்றாண்டுகளின்முன் கபாலமலைமேல் நிகழ்ந்ததை இந்தவேளை நாமும் ஞாபகப்படுத்துவோமாக. அங்கே முறையீடுபண்ணாத செம்மறிப்புருவையைப்போல யேசுக்கிறீஸ்துநாதர் நமக்காக மரணவேதனை அனுபவித்ததை மிகவும் ஆழ்ந்து சிந்திப்போமானால் மனமுருகாதிருப்போமா? திருப்பாடுளின் தியானத்தால் கண்ணீர்விட்டழுது மனஸ்தாபப்பட்டு அவரை வருத்த முதற்காரணமான நமது பாவாக்கிரமங்களை அருவருத்துத்தள்ளாதிருப்போமா?

பெரியவாரமானது மானிடர் சகலருக்காகவும், நம்மில் ஒவ்வொருவருக்காகவும் நமது திவ்வியஇரட்சகர் மரண அவஸ்தைப்பட்டதையும், உயிர்விட்டதையுங் கண்முன்தோற்றுவிக்கிறது. இச்சம்பவத்தால் சருவேசரனுக்குண்டான மகிமை முதலானவற்றைச் சிந்தித்து நாம் பலனடையலாமென்றாலும் யேசுநாதசுவாமி சிலுவையிலிருந்து திருவுளம்பற்றிய "எல்லாம் முடிந்தது" என்ற திருவாக்கியத்தின்சாரத்தை என்றும்தியானித்தல் மிகநலமாகும். எல்லாம் முடிந்தது. சருவேசரனுடைய சித்தத்தை நிறைவேற்றப்பிறந்த யேசுநாதர் அதைச் சரிவரநிறைவேற்றி முடித்தார். தம்மைத்தாமே பரித்தியாகஞ் செய்ய மனுவுருவெடுத்த தேவசுதன் தம்மைமுழுவதும் பலியாகத்தந்தார். மனுக்குலத்தை இரட்சிக்க உதித்தகர்த்தர் தம் அலுவலைப் பூரணமாகச்செய்து முடித்தார்.

கொடியயூதர்கள் தாங்கள் அறிந்திருந்த நிந்தை வேதனைகளையெல்லாம் தங்களுக்கிருந்த சக்தியைப்பிரயோகித்துத்தேவசுதன் அனுபவிக்கப்பண்ணினார்கள். சகலபாடுகளையும் நேசயேசு ஏற்றுக்கொண்டார். இரண்டு கள்வர்நடுவே சிலுவையில் தொங்குகிறார். மரண அவஸ்தைப்படுகிறார். உயிர் பிரியப்போகிறது. கடைசித்துளி இரத்தஞ் சிந்துகிறது. சரீரத்தின் காயங்களென்ன! வேதனை நோக்காடுகளென்ன! ஆத்துமத்தின் துக்கப்பிரவாகமென்ன! தமது மனச்சுயாதீனம், கீர்த்தி சகலத்தையும் நம்மைப்பற்றிப் பலியாகத்தந்தருளுகிறார். அவர் சொல்வதென்ன! "மகனே! மகளே! நீமாத்திரம் எனது நேசப்பெருக்கத்திற்குப் பதில்நேசம் காட்டுவாயானால் நான் முறையிடமாட்டேன்" என்கிறார். நம்மில் ஒவ்வொருவரும் செய்யத்தக்கதென்ன! "என் நேச யேசுவே! இவ்வளவு தயாளமிகுந்த உமக்கு என்னைமுழுவதும் ஒப்படைக்கிறேன். உமது சிலுவையடியில்நின்று இனிப்பாவத்தை முற்றுந்தவிர்த்து, உம்மை அதிகமதிகமாய் நேசிப்பேனென்று தீர்மானித்திருக்கிறேன்" என்பதே.

மனிதர் பிசாசின்கையினின்று மீட்கப்பட்டனர். தேவகோபம் அடங்கியது. வரப்பிரசாதம் நெருங்கியது. மோட்சம் திறந்தது. நித்தியபாக்கியம் சம்பாவனையாகக் கிடைத்தது. திருச்சபை ஏற்படுத்தப்பட்டது. தேவதிரவியஅனுமானங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவ்விதம் நடத்தியபின் எல்லாம் முடிந்ததல்லவோ? என்றாலும் நம்மைப் பார்த்து அவர் கூறுவதென்ன? "உனது இரட்சணியஅலுவலில் பெரும்பாகம் நாம்செய்து முடித்தோம். உன்பங்குசொற்பமுண்டு. அதைப்பூர்த்திசெய்து நீ உனது மோட்சபாக்கியத்தை அனுபவிக்கலாம். நீ அறியவேண்டிய விஷயங்களுக்கு நமது போதனையை விசாரித்துக்கொள். நடக்கவேண்டிய வகைக்கு நமதுமாதிரிகையைக் கண்டுபாவி. உதவிவேண்டிய விதத்திற்கு நமது வரப்பிரசாதத்தை மன்றாடி அடைந்துகொள்" என்கிறார். ஆகலின் அவர் ஏராளமாகத் தந்தருளும் உதவிஒத்தாசைகளைக் கையாடி நமது இரட்சணிய அலுவலில் நமதுபங்கைச் செய்துமுடித்து நித்தியசம்பாவனையை அடைந்தருளத் தீர்மானிப்போமாக.

ஓ யேசுவே! எனதுபலமாகவும் ஆதரவாகவும் இருப்பீராக. எனது சீவியகாலத்தின் ஒவ்வொருநாளும் எனக்குதவியாயிரும். நான் மரணிக்கும்நேரத்தில் உமது சித்தப்படி "எல்லாம் முடிந்தது" என்று உச்சரிக்கும்படியான விதமாய் என் சீவியநாட்களைச் செலவிட அனுக்கிரகிப்பீராக.

## கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரின் வேண்டுகோள்

அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள கத்தோலிக்கபாடசாலைகளைச்சேர்ந்த சுமார் 30 லட்சம் பிள்ளைகளுக்குச் சென்றமாதம் பரிசுத்தபாப்பரசர் வானொலிமூலம் அனுப்பிய விசேஷசெய்தியிலே, ஐரோப்பாவில் யுத்த பரிநாசங்களால் இன்றுமே கடுமையாக வருந்திக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு உதவியாக இந்தத்தபசுகாலத்திலே தங்களாலானதெல்லாம் சேகரித்துக் கொடுக்குமாறு அவர்களைத் தூண்டியிருக்கின்றார். இந்தப் பிள்ளைகள் பசியினாலே வாடும்போதும், கந்தைத்துணிகளையே தரிக்கும்போதும், இல்லிடமற்றிருக்கும்போதும் தங்கள் மாசற்றதனத்தை இழந்துபோகக் கூடியதாய் இருக்கும்நிலைமையை அவர்களுக்கு எடுத்துக்காட்டினார். தமதுஇருதயத்தின் முழுப்பற்றுதலோடு அவர்களுக்கும், அவர்களின் அருமையானபெற்றோருக்கும், அன்புமிக்க பாடசாலைஆசிரியர்களுக்கும் தமது விசேஷஆசீர்வாதத்தை வழங்குகின்ற றோமாபுரியிலுள்ள பரிசுத்தபிதாவுக்காகத் தினமும் மன்றாடிவர மறவாதிருக்குமாறு அவர்களைக்கேட்டுக்கொண்டார்.

### சர்வதேச சற்பிரசாத மகாநாடு

பார்சலோனாநகரிலே அடுத்த வைகாசிமாதம்27-ந்திகதி ஆரம்பமாகவிருக்கின்ற சர்வதேசசற்பிரசாத மகாநாட்டுக்குக் குறைந்தபட்சம் ஐந்து லட்சம் யாத்திரிகர்கள் சமுகமாவார்களெனத் தற்போது மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்கள் நாற்பதுக்குமேற்பட்ட நாடுகளிலிருந்து அங்குபோகவிருக்கின்றார்கள். அமெரிக்க ஐக்கியதேசம் ஏறக்குறைய ஏழாயிரம்பேரையும், கனடா இரண்டாயிரம் பேரையும், இங்கிலாந்து இரண்டாயிரம்பேர்வரையிலும் அனுப்பிவைக்கவிருக்கின்றன. சமீபத்திலே பரிசுத்தபாப்பரசர் பார்சலோனாநகர் மேற்றிராணியாருக்குப் பேட்டியளித்து மகாநாட்டுத்திட்டங்களை ஒப்புக்கொண்டிருக்கின்றார். அவரின் பிரதிநிதியான கருதினாலாண்டவர் கடல்மார்க்கமாக அங்குபோய்ச் சேர்ந்ததும் வைகாசி 27-ந்திகதி மகாநாட்டுவைபவங்கள் ஆரம்பமாகும். "திவ்வியசற்பிரசாதமும், சமாதானமும்" என்பதே மகாநாட்டின் விஷயமாகும். மகாபரிசுத்த திவ்வியநற்கருணை — தேவதாயாரும், திவ்வியநற்கருணையும் — திவ்வியநற்கருணையும், சமாதானமும்— திவ்வியநற்கருணையும், வேதகலாபனையும் — நற்கருணையின் பாப்புவான பத்தாம்பத்திநாதரும், திவ்வியநற்கருணையும், பிள்ளைகளும் — அர்ச்சியசிஷ்டர்களும், திவ்வியநற்கருணையும் எனும் விஷயங்கள்பற்றி லத்தீனிலும், சொந்தப்பாஷைகளிலும் சிறந்த கீதங்கள் இயற்றிஉதவும்படியாக உலகிலுள்ள கத்தோலிக்க கவிஞர்களிடையே ஓர்கீதப்போட்டியும் தொடக்கப்பட்டிருக்கிறது.

### திருப்பாடுகளின் பண்டங்கள்

நமதுதிவ்வியகர்த்தரின் திருப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட திருப்பண்டங்கள் எதனையுமே வைத்துக் காப்பாற்றுவது மிகுந்தகஷ்டமும், ஆபத்துமே விளைப்பதான இந்தக்காலத்திலும் கத்தோலிக்கமக்கள் அவற்றிற்கு மிகுந்தவணக்கம் காண்பிப்பது வழமையான ஓர்சம்பவமாகும். இரட்சகர் அறையுண்ட உண்மையான திருச்சிலுவையின் திருப்பண்டங்கள் றோமாபுரி, பிறசெல்ஸ், கென்ற், வெனிஸ், றகுஸா, பரீஸ், மவுண்ட் அதோஸ் முதலாம் இடங்களிலே இருந்துவருகின்றன. அதன் சிறுதுண்டுகள் விசாரணைப்பங்குக் கோவில்களிலும், தனிப்பட்டகுருமாரிடமும், ஒருதொகையான விசுவாசிகளிடமும் இருக்கின்றன. ஆனால், திருச்சிலுவைமாத்திரம் திருப்பாடுகளின் திருப்பண்டங்களில்அடங்கமாட்டாது. முள்முடி பரீஸ்நகரிலும், பொருத்தப்படாத திருநெட்டங்கி றிறெவெஸ்நகரிலும், தூனிக்கை என்கிறஅங்கி பரீஸ் நகருக்குச்சமீபமான ஆர்ஜென்ரியூயில் எனுமிடத்துக் கோவிலிலும், கிறீஸ்துநாதரின் திருமுகத்தை வரோணிக்காள் துடைத்த வஸ்திரமும், அவர்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

### நம்பத்திரிகை

பரிசுத்தவாரத்தையிட்டு வழமைபோல நம்பத்திரிகை அடுத்த 10-ந் திகதி வியாழக்கிழமை வெளிவரமாட்டாது. 17-ந் திகதி வியாழக்கிழமையே வெளியாகும்.

### நமது அச்சியந்திரசாலை

பரிசுத்தவாரத்தையிட்டு இம்மாசம் 9-ந் திகதி புதன்கிழமை மத்தியானம் தொடக்கம் 14-ந் திகதி திங்கட்கிழமை முடிகிறவரையிலே நமது அச்சியந்திரசாலை பூட்டப்பட்டிருக்கும். 15-ந் திகதி செவ்வாய்க்கிழமையே மறுபடி வேலைஆரம்பமாகும்.

### கல்லூரிவிடுமுறை

சம்பத்திரிசியார் கல்லூரியின் ஈஸ்றர் விடுமுறை நாளை 4-ந்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். பின்னர்விடுமுறை முடிந்து அடுத்தவைகாசிமாதம் 5-ந்திகதி கல்லூரிஆரம்பமாகும்.

### பாப்பரசரின் அனுதாபசெய்தி

பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களின் மறைவையிட்டு அவரின் பூதவுடல் தகனஞ்செய்யப்பெற்ற தினமாகிய சென்றசனிவாரமன்று பரிசுத்தபாப்பரசர் தமது அனுதாபத்தைக் கொழும்பு அதிமேற்றிராணியார்மூலம் அனுப்பி வைக்கலாயினர். "பிரதமர் சேனநாயக அவர்கள் காலகதியடைந்திருக்கும் இச்சந்தர்ப்பத்திலே இலங்கை அரசாங்கத்துக்குப் பரிசுத்தஸ்தானத்தின் அனுதாபத்தைத் தயவுசெய்து தெரிவிப்பீராக" என்பதே அந்தச்செய்தியாகும்

### வண. பொமிக்கோ சுவாமியார்

யாழ்ப்பாணம், சந்தியோகுமையோர் கோவில் கட்டளைக்குரவராக இருந்துவந்த வண. எமில் பொமிக்கோசுவாமியவர்கள் சுகத்தாழ்வுகாரணமாக வைத்தியரது ஆலோசனைப்படியே சென்ற திங்கட்கிழமை பிரான்சுக்குப் பயணமாயினர். முதனாள் ஞாயிற்றுக்கிழமை மாலை அக்கோவிலைச்சேர்ந்த கத்தோலிக்கமக்கள் தங்கள் பாடசாலையிலே சுவாமியாருக்கு ஓர் பிரியாவிடை விழாக் கொண்டாட்டம் நடத்தினர்கள். அத்தருணம்பலரும் சுவாமியவர்களின் குணாதிசயங்களைப் பாராட்டியும், யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே அவர் தொண்டாற்றியுள்ள பதினெட்டு வருடங்களிலும் பதினொன்றரை வருடங்களைச் சந்தியோகுமையோர் கோவில் விசாரணைப்பங்கிலே செலவிட்டு, நோயாளருக்குப் பெரும்ஆறுதலாகவும், யாவர்க்கும் ஓர்நல்லபிதாவாகவும் இருந்துவந்ததை மகிழ்ச்சியுடன் எடுத்துக்காட்டியும் நன்றிபாராட்டியும் ஓர் அன்பளிப்புச்செய்து அவரது திருக்கரஆசியைப் பெற்றுகின்றார்கள். சுவாமியவர்கள் சிந்தாத்திரையாகச் சென்று தீவிரசுகம்பெற்று மீளவும் நம்மத்தியில்வந்துசேர எம்பெருமான் திருவருள் பாலிப்பாராக!

### அர்ச். சூசையப்பர்பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்சபை, அர்ச். சூசையப்பர்பந்தியின் வருடாந்தபொதுக்கூட்டம் இம்மாசம் 6-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சம்பத்திரிசியார் கல்லூரிமண்டபத்தில் நடந்தேறும். மகாவந். மேற்றிராணியாண்டவர் கூட்டத்திற்குத் தலைமைவகிப்பார். அத்தருணம் பந்தியின் அங்கத்தவர்களும், உபகாரிகளும் திரளாகச் சமுகமளிக்குமாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

### கமத்தொழில் மந்திரியார்

கமத்தொழில் மந்திரியாராய் இருந்துவந்த திரு. டட்லி சேனநாயக அவர்கள் பிரதமராக நியமனம்பெற்றமையாலே அவரிடமாகப்புதிய கமத்தொழில் மந்திரியாராக முன்னர் கமத்தொழில் மந்திரியாரின் பாராளுமன்ற காரியதரிசியாகவிருந்த பி. வி. புலன்குலமதிசாலை அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் பாராளுமன்றத்திலே அனுராசபுரப் பிரதிநிதியாக இருந்துவருகின்றார்.

### நெசவு தொழிற்சாலைகள்

இலங்கையிலே நமது அரசினர் அமைக்கவிருக்கும் புதியநெசவு தொழிற்சாலையைக் கட்டுவதற்கான ஒப்பந்தகேள்விப்பத்திரங்கள் அனுப்புங்காலம் சென்றவெள்ளிக்கிழமையுடன் முடிவாகிவிட்டது. இத்தப்புதிய நெசவு தொழிற்சாலை பலஇனங்களுமாக இலங்கைக்குத் தேவையான புடவையிலே பத்தில்ஒருபங்கை உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிடையிலே கூட்டுறவு மொத்தஸ்தாபனம் தனக்கென்றே சொந்தமாக ஓர் நெசவு தொழிற்சாலையை அமைக்கவிருக்கின்றது. இது வருடம்ஒன்றுக்கு இருபதுலட்சம்யார் புடவையை நெசவுசெய்து உதவக்கூடியதாகும். இவ்வருட இறுதியில் அல்லது மறுவருட ஆரம்பத்தில் இது நெசவுவேலை செய்யத்தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி

இலங்கையிலே சென்ற பங்குனிமாசத்தில் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை சென்றமாசியிலும் ஆறுபுள்ளிகளாலேகுறைந்து 280 ஆகியிருக்கிறது. சென்றமாசிமாதப் புள்ளித்தொகை 286. இவ்வருடஆரம்பமுதல் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை பத்துப் புள்ளிகளாலே குறைந்திருக்கிறது. அதாவது மாசியில் 4 புள்ளிகளும், பங்குனியில் ஆறுபுள்ளிகளுமாகும். பங்குனிமாசப் புள்ளித்தொகைக் குறைவாலே அரசினருக்குப் பஞ்சப்படிச் செலவுதொகையிலே 8 லட்சம் ரூபா வரையில் குறைந்திருக்கிறது. வாழ்க்கைச்செலவு யுத்தத்துக்கு முன்போல விரைவிலே வந்துவிடுமென்று பொருளாதாரநிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

### வங்கிவிடுமுறை மாற்றம்

நிகழும் சித்திரை 16-ம், 17-ந்திகதிகளுக்குப் பதிலாகச் சித்திரை 19-ம் 21-ந் திகதிகள் வங்கிவிடுமுறை நாட்களாய் இருக்கவேண்டுமென உள்நாட்டுமந்திரியார் அறிவித்துள்ளார். சித்திரை 10-ந்திகதிமுதல் 18-ந்திகதி வரையிலே வங்கிகள்தொடர்ந்து மூடப்பட்டிருப்பின் வர்த்தகநிலையங்களுக்குக் கஷ்டம்ஏற்படுமென மத்தியவங்கி முறையிடுசெய்ததின்மேல் இவ்வாறு மாற்றப்பட்டிருக்கிறது.

### பிரதமரின் உருவச்சிலை

கொழும்பிலே சுதந்திரச்சதுக்கத்திலே காலஞ்சென்ற பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களின் உருவச்சிலை ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைப் போக்குவரத்துமந்திரியார் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் செய்துவருகின்றார். இதுவிஷயமாக அவர் உலகப்பிரசித்திபெற்ற அமெரிக்க சிற்பியான திரு. டேவில் டென் என்பவரின் உதவியைக்கேட்குமாறு வாஷிங்ரன்நகரில் இருந்துவருகின்ற இலங்கை ஸ்தானீகரான திரு. ஜி. சி. எஸ். கொறியா அவர்களுக்குத் தந்தியனுப்பியிருக்கின்றார். இந்தஉருவச்சிலை சுதந்திரமண்டபத்திற்கு எதிரேயுள்ள சுதந்திரசதுக்கத்தில் நிறுவப்படவிருக்கின்றது.

### கடுதாசித் தொழிற்சாலை

வாழைச்சேனையிலே 1 கோடியே 30 லட்சம் ரூபா செலவுமதிப்பில் அமைக்கப்பட்டுவரும் முதலாவது அரசாங்க கடுதாசித்தொழிற்சாலையிலே கடுதாசிச்செய்கைக்குத் தேவைப்படும் இல்லுக் என்றபுல்லை அதற்குச் சமீபமாய் ஆயிரம்ஏக்கர்நிலத்தில் விளைவிப்பதற்கான நடவடிக்கைகளைக் கமத்தொழிற்பகுதி எடுத்துவருகின்றது. அங்ஙனம் அதை விளைவிக்குமிடத்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய புல்லை ஒழுங்காகக் கொடுத்துக்கொண்டிருக்க முடியுமாம். எழுதுவதற்கும், அச்சடிப்பதற்குமான சிறந்தஇனக்கடுதாசிகளைச் செய்வதற்கு அவசியமான பொருட்கள் தொழிற்சாலையின் பக்கமாக அதிகமாக இருக்கின்றன. 500 பேருக்குப் பிழைப்புக்கொடுக்கக்கூடிய வகையிலே தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

### கலியாணக்கோஷ்டிவிபத்து

நீர்கொழும்புக்குச் சமீபமான துனகாகாவிலே சென்றசனிக்கிழமை ஓர் கலியாணம்நடந்தது. அன்றுபிற்பகல் சிறுபோசனத்தின்பின் கலியாண விருந்தாடிகள் நீர்கொழும்பிலே பிரதிமைப்படம் பிடிப்பதற்காகப் புதியதம்பதிகள் சமேதராய் அங்கு கார்களில் சென்றபோது, ஆறுபேருடன்சென்ற கார் ஒன்று மகாஉனுப்பிட்டியிலே மற்றோர்காருக்கு வழிவிலகிக்கொடுத்தபோது வீதியைவிட்டுவிலகி மதகுஒன்றிற்போய் மோதிப்புரண்டமையால் ஆறுபேரிலும் மூவர் அந்த இடத்திலேயே உயிர்மாண்டனர். காரின்சாரதியான றன்காமியும், மற்றொருவரும் படுகாயமடைந்து நீர்கொழும்பு ஆஸ்பத்திரியிலே சிவமோசமான நிலைமையில் இருக்கின்றனர். இந்தவிபத்து நீர்கொழும்பிலிருந்து மூன்றுமைல் தூரத்தில் நிகழலாயிற்று.

### கள்ளநோட்டுப் புழக்கம்

இலங்கையிலே சமீபத்தில் பாவனைக்குவந்துள்ள புதியபத்துரூபா நோட்டுகளைப்போன்று அதேபருமனும், தோற்றமுமுள்ள பிறநாட்டுக்கடுதாசி நோட்டுகள் பத்துரூபாநோட்டுக்கட்டுகளுள் களவாகப் புகுத்தப்பட்டு இலங்கையின் சுத்தமானநோட்டுகளாகப் புழக்கத்துக்குவந்திருப்பதுகண்டறியப்பட்டிருக்கிறது. சிலதினங்களின்முன் கொழும்பிலுள்ள வங்கி ஒன்று அத்தகைய கள்ளநோட்டுகள் பலவற்றைப் பெற்றிருக்கிறது. இந்தப்பிறநாட்டு நோட்டுகள் சரிசுத்தம் இலங்கைப் புதிய பத்துரூபா நோட்டுகளைப்போல் இருப்பதாலே அவைகள் மட்டிலே விசேஷமாய் இரவில்மாற்றும்போதும், வாங்கும்போதும் விழிப்பாயிருக்க வேண்டும்.


### சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.


## சாட்டி, சிந்தாத்திரை மாதாவின்

# சித்திரைத் திருநாள்



சாட்டி எனும் யாத்திரைப் பதியிலே கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் நல்யாத்திரை மாதாவின் முதல் திருநாள் இம்மாசம் 15-ந்திகதி ஆரம்பமாகி 20-4-52 ஞாயிற்றுக்கிழமை காலை பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும்.

இத்திருநாளுக்குவழமையாய் நோவனை செய்தவர்களும், புதிதாகநோவனை செய்யவிரும்புவோரும் கீழ்க்காணும் விலாசத்துக்குப் 12 4-52க்குமுன் எழுதி அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

S. A. ஞானப்பிரகாசம்
மண்டைதீவு, கட்டளைக்குரவர்
யாழ்ப்பாணம்.

## பரிசுத்தவாரம்

### ஆசனக்கோவிலில் திருச்சடங்குகள் நடக்கும்நேரம்

**சித்திரை 6-ந்திகதி குருத்துஞாயிறு**

காலை 5-30 மணிக்கு முதற்பூசை
,, 7-00 ,, மேற்றிராணிஆண்டவராலே குருத்தோலை மந்திரித்தலும், சுற்றுப்பிரகாரமும், பூசையும்
,, 8-15 மணிக்கு மூன்றாம் பூசை
மாலை 4-00 சிலுவைப்பாதை, செபமாலை, ஆசீர்வாதம்.

**சித்திரை 10-ந்திகதி பெரியவியாழன்**

காலை 5-15 மணிக்கு முதற்பூசை
,, 7-00 ,, மேற்றிராணியாண்டவரால் பெரியபாடற்பூசை. பரிசுத்த தைலத்தை அபிஷேகம்பண்ணுதல். எழுந்தேற்ற பீடத்தை நோக்கித் திவ்விய நற்கருணை சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டு செல்லுதல்.
மாலை 5-00 மணிக்கு பன்னிருவறியவர்களின் கால்களைக் கழுவும் திருச்சடங்கு.
,, 7-00 'ஸ்தாபாத் மாத்தர்' எனும் வியாகுலசங்கீதம்பாடுதல்.
,, 10—11 மணிக்கு திருமணித்தியாலம் (ஆங்கிலம்)
,, 11—12 மணிக்கு திருமணித்தியாலம் (தமிழ்)
,, 12—1 மணிக்கு திருமணித்தியாலம் (சிங்களம்)

**சித்திரை 11-ந்திகதி பெரியவெள்ளி**

காலை 7-00 மணிக்குத் திருச்சிலுவை வணக்கம். முதனாள் தேவவசீகரஞ்செய்யப்பெற்றசற்பிரசாதங்கொண்டு மேற்றிராணியாண்டவரின் திவ்வியபூசை.
காலை 8-30 மணிக்கு சிலுவைப்பாதை.
மாலை 3-00 மணி தொடங்கி 6 மணிவரையும் மும்மணி ஆராதனை.

**சித்திரை 12-ந்திகதி பெரியசனி**

காலை 6-30 மணிக்கு பாஸ்குத்திரி மந்திரித்தல், நெருப்பு, தண்ணீர் ஆசீர்வதித்தல்.

**சித்திரை 13-ந்திகதி பாஸ்குஞாயிறு**

காலை 5-30 மணிக்கு முதற்பூசை.
,, 7-00 ,, மேற்றிராணியாண்டவரால் பெரியபாடற்பூசை.
,, 8-30 ,, மூன்றாம்பூசை.
,, 9-00 ,, உயிர்த்த ஆண்டவரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்.
மாலை 5-00 மணிக்கு வேஸ்பர், பிரசங்கம், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது பிரதமர்

தேசப்பிதா என்றும், சிறந்த அரசியல்ஞானி என்றும், பெருந்தேசாபிமானி என்றும், சுதந்திரவீரர் என்றும், பெருந்தலைவர் என்றும் நாடெங்குமே எல்லவராலுமே கொண்டாடப்படுகின்ற மாஜிபிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களின் பூதவுடம்பு மறைந்தது. ஆனால், அவரின் புகழுடம்போ ஸ்ரீலங்கா எனப்படும் எமதுசெல்வநாடு உள்ளநாள்வரையிலே குன்றிற்சுடர்போல் என்றும் நிலவுமென்று நிச்சயமாகக்கூறலாம். அன்றுசனிக்கிழமை பிற்பகல் அவரின் பூதவுடல் பாராளுமன்ற ஆஸ்தானமாளிகையிலிருந்து சுதந்திரசதுக்கத்துக்குப் பிரமாண்டமான ஓர் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டபோது, தேசீயவீரர்திலகம் ஒருவரின் மகத்தான வெற்றிப்பிரவேசமாகவே அதுகாட்சியளிக்கலாயிற்று. ஊர்வலம் சென்றபாதையின் இருமருங்கும் மக்கள் கவலைதோய்ந்தமுகங்களுடனும், கலங்காநின்ற கண்களுடனும் நெருங்கிநிற்க, சுதந்திரசதுக்கத்திலே ஈமச்சடங்குகளைப் பார்ப்பதற்காகத் தகனபீடத்தைச் சூழவரப் பத்துலட்சத்துக்கு மேற்பட்டமக்கள் சனசமுத்திரம்போலத் தேங்கிநிற்க, மாட்சிமைதங்கிய மகாராணியாரினதும், பல்வேறு அரசாங்கங்களினதும் பிரதிநிதிகளும், பிரதமரும், மந்திரிமாரும், பிரதிநிதிகள்சபை, செனற்சபை அங்கத்தவர்களும், மற்றும் அநேகபிரமுகர்களும் சமுகமாயிருக்க, படைவீரர்கள் அணிவகுத்துநிற்க, தகனவைபவம் நடந்தேறியது. ஆம், ஓர் நாட்டின் காலஞ்சென்ற ஓர் பெரியவீரருக்கு அளிக்கப்படும் சகலமரியாதைகளும் அவருக்கு அளிக்கப்படலாயின. தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார்.... நிற்க, மைந்தனே தந்தையாய் மகிதலத்திலே வந்ததுபோலும், பழம்நழுவிப் பாலில்விழுந்ததுபோலும் காலஞ்சென்ற பிரதமர்அவர்களின் தவப்புதல்வர் திரு. டட்லி சேனநாயக அவர்கள் புதியபிரதமராக வந்திருப்பது ஸ்ரீலங்காசெய்த தவப்பலனேயென்று சமய, சாகிய பேதமின்றியே மக்கள் அனைவரும் ஒப்புக்கொண்டு மகிழ்ச்சிகொள்ளுகின்றார்கள். உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சமய, சாகிய பேதமின்றியே ஆங்காங்குள்ள சங்கங்களும், சபைகளும், ஸ்தாபனங்களும், தலைவர்களும் புதியபிரதமர்மீது கடவுள்திருவருளை இரந்து அவருக்குத் தினமானம் அனுப்பிக்கொண்டிருக்கும் சோபன செய்திகளும், ஆசிச்செய்திகளுமே இதற்குப் போதியசான்றாகும். தமது அருமைத்தந்தையாரைப் பின்தொடர்ந்து கமத்தொழில் மந்திரியாராகவந்த புதியபிரதமர் எமதுநாட்டின் கமத்தொழில் விருத்திசம்பந்தமாய் இதுவரை சாதித்துள்ளவைகளிலிருந்து தமக்குள்ள பெருந்தகுதியைப் பகலைப்போன்று அதிகந்தெளிவாக நிரூபித்துக் காட்டியிருக்கின்றார். ஆமாம், சிங்கத்துக்குப் பிறந்தது சிறியநரிக்குட்டியாகுமா? இங்கிலாந்திலே மன்னரின் மகள் மகாராணியானதுபோல, இலங்கையிலும் பிரதமரின் மகன் பிரதமராகியிருக்கின்றார். பிரித்தானியசாம்பிராச்சிய பிரதமர்களில் இவர் அதிகம் வயதிற்குறைந்தவர். ஓர் பிரமச்சாரியாய் இருந்துவருகிறவர். நியாயசாஸ்திரங்கற்றுப் பரிஸ்றர் பட்டம்பெற்றவர். இவர்தாமாகப் பிரதமர்பதவியை நாடவில்லை. சனசமூகமே இவர் பிரதமராக வேண்டுமென நாடிநின்றது. அதனால் பெரும் உத்தரவாதம் பொருந்திய அப்பதவியைவகித்துச் செவ்வனே நடத்துவதில் சனசமூகமே அவருடன் ஒத்துழைக்கவேண்டியது. தமது புகழ்பெற்ற தந்தையாரைப்போன்று கடவுட்பற்றும், சமயப்பற்றும்பூண்டுள்ள புதியபிரதமர் புராதனபாரம்பரியங்களை மேற்கொண்டு தமதுதந்தையாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நல்லரசுநடத்திவர எல்லாம் வல்லஇறைவன் திருவருள் பாலிப்பாராக!

## புதிய பிரதமரும் மேற்றிராணிமாரும்

இலங்கைக்கத்தோலிக்க நன்மக்கள் தேசாபிமானத்திலோ, அன்றேல் சகல சாதிசமய மக்களுக்கும் சமத்துவஉரிமைகள் வழங்கி நடாத்தப்படும் நல்லரசாங்கத்துடன் ஒத்துழைப்பதிலோ மற்றெவர்களிலும் சற்றேனும் குறைந்தவர்கள் அல்லரென்பதைக் கொழும்பு அதிமேற்றிராணியாரும், ஏனைய மேற்றிராணிமார்களும் சென்ற சனிவாரம் எவருமே பிரமிக்கும்படியாகவும், எவ்விதசந்தேகத்துக்கும் இடமில்லாதபடியும் தெளிவாகக் காண்பித்திருக்கின்றனர். அன்றுகாலை அவர்கள் அதிமேற்றிராணியாரின் தலைமையில் ஒன்றுசேர்ந்து ஒரேகுழுவாகப் பாராளுமன்ற சபாமண்டபஞ்சென்று காலஞ்சென்ற பிரதமர்மட்டிலே தங்களுக்குள்ள அபிமானத்தைக் காண்பித்து, அவருக்குத்தங்கள் கடைசிமரியாதையைத் தெரிவித்துக்கொண்டார்கள். அத்தருணம் அதிமேற்றிராணியாண்டவர் பிரதமரின் பூதவுடலுக்கு ஓர்மலர்ச்செண்டு சாற்றிநின்றார். அதன்மேல் அவர்கள் புதியபிரதமரின் நிவாசமாகிய "ரெம்பிள் றீஸ்" எனும்மாளிகை சென்று அவருக்குச் சுபசோபனமும், ஆசியும்கூறினார்கள். அத்தருணம் அதிமேற்றிராணியாண்டவர் பேசியபோது, அவர் தமது தந்தையாரைப்போன்று சிறுபான்மைச் சாகியத்தினருக்குச் சமஉரிமைகள்வழங்கிச் சனநாயக ஆட்சிமுறையைக் கடைப்பிடித்து ஒழுகுவாரெனத் தமக்குள்ள மேலான நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டார். புதியபிரதமர் அளித்தபதிலிலே தமது தந்தையாரின் ஆட்சிகாலத்திற்போன்று எல்லவர்க்கும் சமநீதியும், சமஉரிமையும் வழங்கிச் சுதந்திரலங்காவின் சுதந்திரப்பெருமையைக் காத்துவைப்பதாக வாக்களித்தனர். பின்னர் அவர்கள் மாஜிபிரதமர் அவர்களின் பாரியாரைச்சந்தித்து அனுதாபம்தெரிவித்துத் திரும்பினர்கள் என்பதும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ட்றூமன்

இவ்வாண்டுகார்த்திகைமாதம் அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் நிகழவிருக்கின்றது. சனநாயககட்சியென்றும், குடியரசுக்கட்சியென்றும் அத்தேசத்திலே இருந்துவருகின்ற பிரதான அரசியற்கட்சிகள் இரண்டும் இத்தேர்தல் விஷயமாய்த் தத்தம் அபேட்சகர்களைத் தெரிவுசெய்வதில் ஏலவேதானே மும்முரமாக ஈடுபடத்தொடங்கிவிட்டன. ஆனால், ஜனாதிபதி றூஸ்வெல்ற் அவர்களுக்குப் பின் சுமார் ஏழு ஆண்டுகளாக அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்துவருகிறவரான திரு. எச். ட்றூமன் அவர்கள் சிலவேளை திரும்பவும் தேர்தலுக்கு அபேட்சகராய் முன்வருவாரோ என்பது, இருகட்சிகளுமே நிச்சயித்துக்கூறமுடியாத ஓர் சந்தேகச் சூழலை உண்டுபண்ணிவரலாயிற்று. அவரும் இதுவிஷயமாய் இதுவரை தமதுமுடிபை எவருக்குந்தெரிவியாது பரமஇரகசியமாக வைத்திருந்தார். கடைசியாகச் சென்ற சனிக்கிழமை இரவு வாஷிங்ரன் நகரிலே யெவ்வேர்ஸன் ஜாக்ஸன்தின வருடாந்த விழாவிலே, ஜனநாயககட்சித் தலைவர்களும், அங்கத்தவர்களுமாக ஆறாயிரவர்கூடியிருந்த சமுகத்திலே அவர் பேசியபோது, "நான் மறுதேர்தலுக்கு ஓர் அபேட்சகராய் நிற்கமாட்டேன். நான் நெடுங்காலம் எனது நாட்டுக்குச் சேவை செய்துவிட்டேன். அதுவும் திறமையாகவும், நேர்மையாகவும் சேவைசெய்துள்ளேனென்றே நான் கருதுகிறேன். திரும்பவும் அபேட்சகராகத்தெரியப்படுவதை நான் அங்கீகரிக்கமாட்டேன். வெண்மாளிகையிலே மேலும் நான்குவருடகாலம் பதவிவகிப்பது எனதுகடமையல்லவென நான் உணர்கிறேன்" என்றுகூறக்கேட்டதே அனைவரும் ஆச்சரியவசத்தராய்த் திகைத்துப் போயினார்கள். ஜனாதிபதிட்றூமன் அவர்கள் தீர்க்க ஆலோசித்தே இத்தகைய முடிவைச் செய்துள்ளாரென்பது நன்கு புலனாகின்றது. தமக்குப்பதில் சனநாயககட்சியைச் சேர்ந்த அபேட்சகர் ஜனாதிபதியாகத் தெரியப்படுவாரானால், தாம் செய்தவைகளையும், செய்யத்திட்டம்போட்டிருந்தவைகளையும் அவர்தொடர்ந்து குறைவின்றி நடத்திக்கொண்டுபோவாரென்பது அவருக்குத் தெரியும். ஆனால், குடியரசுக்கட்சி அபேட்சகர்களாய் நிற்கின்ற இருவருள்ளும் செனற்றர் ராவ்ற் என்பவரோ அவைகளையெல்லாம் புரட்டிவிடுவாரென்பதை அவர் நன்கறிவார். அதனால் இவர் வெற்றிபெறும் நிலைமையில் இருப்பாராயின் திரும்பவுமே தாம் அபேட்சகராக முன்வர எண்ணியிருந்தார். ஆனால், அக்கட்சியின் மற்றஅபேட்சகரான ஜெனறல் ஈசனேவர் அவர்களின்கையே தற்போது ஓங்கியிருப்பதிலிருந்து, இவர் புதிய ஜனாதிபதியாகத் தெரியப்படுமிடத்துத் தமது கொள்கைகளையும், செயல்களையும் கடைப்பிடித்தொழுகுவாரென அவர் நிச்சயமாக அறிவார். அதனால் திரு. ட்றூமன் அவர்கள் திரும்பவும் அபேட்சகராக வருவதை நிறுத்திக்கொண்டதில் ஆச்சரியமில்லை.

## ஓயாத சகாயமாதா பக்தி வணக்கம்

இன்று கத்தோலிக்கஉலகில் தேவமாதாவுக்குத் தோத்திரமாகப் பரந்துகொண்டுவரும் பக்திமுயற்சிகளில், ஓயாது சகாயம்புரியும் மாதாவைப்பத்திபண்ணி அவரின்சகாயத்தை இரந்துகொள்வதும்ஒன்றாகும். கொழும்பிலே இந்தப்பக்தியை எத்தனையோபேர் ஒன்றுசேர்ந்து அனுசரித்து மாதாவின்அருளால் எவ்வளவோ சகாயங்களை அடைந்துவருகின்றார்களென அறிகின்றோம். யாழ்ப்பாணத்திலே பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலில் இந்தப்பத்திவணக்கம் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு அதிவண. எஸ். பீற்றர்சுவாமியார் செய்யவிருக்கும் பிரசங்கத்துடனும், புத்திபோதனையுடனும் ஆரம்பமாகவிருக்கின்றது. அதனால் மாதாவின்பக்தர்கள் அவ்வேளை திரளாகச் சமுகந்தந்து ஓயாது சகாயம்புரியும் மாதாவின் பக்தியனுசாரத்தில் பங்குபற்றுவார்களாக.

## நானாசங்கதிகள்

—உலகத்திலுள்ள ஒவ்வொருமனிதனையும் கொல்வதற்குப் போதுமான அணுக்குண்டுகள் இன்னும் ஐந்துவருடகாலத்திலே அமெரிக்கவரசினிடம் இருக்குமென்று நியூயோர்க்நகரிலே அணுச்சக்தி விஞ்ஞானியான திரு. லூயிஸ் ரிடனூர் சென்ற 29-ந்திகதி மகாநாடொன்றில் கூறியிருக்கின்றார். ஒரேசமயத்தில்வெடிக்கச்செய்யப்படும் பதினாயிரம் அணுக்குண்டுகளிலிருந்து கிளம்பும் றேடியோ அலைகள் பாய்ச்சப்பட்ட தூசிகள் இந்தப்பரிநாசவேலையைச் செய்யப்போதியனவாம்.

—சிங்கப்பூரிலிருந்து இரண்டரைமைல் தூரத்திற்கப்பால் 220 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதாய்ச் சிங்கப்பூரிலுள்ள ஓர் சீனநியாயவாதிக்குச் சொந்தமான ஓர்சிறியதீவு இருக்கின்றது. இவர் அத்தீவிலிருந்து 20,000 தொன் மணலைக் கப்பலிலே யப்பானுக்கு ஏற்றிஅனுப்புதற்கான திட்டங்களைச் செய்துவருகின்றார். இந்தமணல் யப்பானிலே கண்ணாடிஉற்பத்தி செய்வாருக்குத் தேவைப்படுகின்றதாம்.

— தமதுசம்பளத்தில் பதினொன்றில் ஒருபங்கைமட்டும் பெற்றுக்கொண்டு மீதியை அரசாங்கத்துக்கே கையளித்துவிட மேற்குவங்காள கவர்னர் டக்றர் எச். சி. முக்கர்ஜி தீர்மானித்திருக்கின்றார். அதாவது மாதம் ஒன்றுக்குத் தமக்குக்கிடைக்கும் சம்பளமாகிய 5,500ரூபாவில் 500ரூபா மட்டுமே அவர் பெற்றுக்கொள்ளுவார் என்று பத்திரிகைகளிலே ஒருசெய்தி வெளிவந்திருக்கிறது.

—ஜேர்மனியிலே பிறெமென் நகரில் சென்ற மகாயுத்தம் முடிந்ததுமுதல் இதுவரையிலே இடிகரையான கட்டடங்களினுள்ளும், நிலத்தினுள்ளும் புதைந்துகிடந்த சிறியனவும் பெரியனவுமான நாற்பதுலட்சத்துக்குமேற்பட்ட குண்டுகளையும், வெடிச்சுரங்கங்களையும் அந்நகரிலுள்ள குண்டுகள் அகற்றும் படையானது பெரும்விபத்துயாதுமின்றியே வெளியேற்றியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருநாள் அட்டவணை

சித்திரைமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 4 | தேவதாயின் ஏழு வியாகுலம் | (வெ) |
| சனி | 5 | அ. விஞ்சேந்தியு பெரியார் | (வெ) |
| ஞா | 6 | குருத்தோலை ஞாயிறு — பரிசுத்தவாரம் | (ஊ) |
| திங் | 7 | அ. கல்லியோப்பியார் | (ஊ) |
| செ | 8 | அ. அல்பேத்தப்பர் | (ஊ) |
| புத | 9 | அ. வல்திருத்தம்மாள் | (ஊ) |
| வி | 10 | பெரிய வியாழன் — தேவ நற் | |

சத்தியவேத
# பாதுகாவலன்

1952-ம் ஆண்டு
சித்திரைமாதம் 3-ந் திகதி



# பிள்ளைகளின் கத்தோலிக்க கல்வியைப் பற்றிய நிருபம்

தேவகிருபையினாலும்
பரிசுத்தஸ்தானத்தின் தயவினாலும்
யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய
ஜெறேம் எமிலியானுஸ்பிள்ளை
ஆகிய நாம்
நமது மேற்றிராசனத்தின்
சகலகுருமாருக்கும் விசுவாசிகளுக்கும்
சுபமும், கர்த்தரில் ஆசீர்வாதமுங்கூறி
விடுக்கும் நிருபம்

மிகவும் அருமையான சகோதரரே, யேசுக்கிறீஸ்துவில் அன்பார்ந்த பிள்ளைகளே!

நாம் இந்தமேற்றிராசனப்பொறுப்பை ஏற்றுக்கொண்டநாள்முதல் நமது கத்தோலிக்கபிள்ளைகளின் முறைமையானகல்வியைப்பற்றி அதிக கரிசனை எடுத்துவரலானோம். இது மிகவும் காத்திரமானதும், கவனிக்கற்பாலதுமாகையால், அதைப்பற்றி இந்தப்பரிசுத்த தபசுகாலத்தில் உங்களுக்குச் சிலகூறுவது அவசியமும், காலத்துக்கேற்றது மாகுமென எண்ணுகிறோம்.

## 1. கிறீஸ்தவ கல்வியின் விளக்கம்

சருவேசுரன் மனிதனைத் தமது ரூபசாயலாகச் சிருஷ்டித்தார். அப்பொழுதே அவனைச் சுபாவத்திற்கு மேலான நிலைக்குஉயர்த்தி அந்தநிலைக்கு ஏற்ற கதியைஅடையும்படி, அதாவது தம்மையே நேர்முகமாய்த் தரிசித்து நேசிக்கும்படி நியமித்தார். மனிதன் தனதுமதியீனத்தினால் ஆதிப்பரிசுத்த அந்தஸ்தை இழந்தபொழுது, அவனை இரட்சித்துச் சருவேசுரனுடைய சுவீகாரப்புத்திரன் என்ற சுபாவத்திற்கு மேலான மகிமையை அவன்திரும்பவும் அடைந்துகொள்ளத்தக்கதாகக்கருணையங்கடவுள் தமது ஏகபேறனகுமாரனை அனுப்பினார்.

மனிதன் மீட்கப்பட்டபோதிலும் சென்மபாவத்தின் பிரதானவிளைவுகளாகிய அறிவீனம், நிலையின்மை, நெறிகெட்டபற்றுதல்கள் இன்னுமே அவனிடம்இருக்கின்றன. மனிதன் தனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் உத்தமகதியை அடையவேண்டுமாகில் தேவசத்திய வெளிச்சத்தால் அறியாமை அற்றுப் போகவேண்டும்; தேவவரங்களால் சித்தம் திடமடையவேண்டும்; நெறிகெட்டபற்றுதல்கள் திருத்தப்பட்டு, நல்லமனப்பற்றுதல்கள் வளர்த்துப் பாதுகாக்கப்படவேண்டும்.

தேவநியமிப்பின்படி, சருவேசுரன் தமது ஒரேபேறன குமாரனையே எங்கள் "வழியும், சத்தியமும், சீவியமு"மாகத் தந்திருக்கின்றார். (அரு. 14: 6) ஆகையால், "தேவவரப்பிரசாதத்துடன் ஒத்துழைத்து மெய்யான பரிபூரணகிறீஸ்தவனை ஆக்குவதே, அதாவது ஞானஸ்நானத்தினால் திரும்பவும் பிறந்தவர்களிடம் கிறீஸ்துநாதரை அமைப்பதே கிறீஸ்தவகல்வியின் முறையான உடன்நோக்கமாம்" என்று கிறீஸ்தவகல்வியைப்பற்றி எழுதியநிருபத்தில் பதினொராம்பத்திநாதபாப்பானவர் கூறியிருக்கிறார். அவர் இன்னும் தொடர்ந்துகூறுவதாவது: "இதற்காகவே கிறீஸ்தவக்கல்வி மனிதனுடைய ஆத்தும-சரீர சீவியத்திலும், யுக்திவளர்ச்சியிலும், ஒழுக்கசீவியத்திலும், தனிச்சீவியம், குடும்பசீவியம், சமுதாயசீவியம் என்பவற்றிலும் இரண்டறக்கலந்து அவற்றைத் தன்னுள் அடக்கிக் கொள்கின்றது. அடக்கிக்கொண்டு, அவைகளைக் குறைத்துவிடாமல் கிறீஸ்துநாதரின் சாதனைக்கும், போதனைக்கும்இணங்க அவைகளை உயர்த்தி, நிரைப்படுத்தி, நிறைவுபெறச் செய்கிறது. ஆகையால், மெய்யான கிறீஸ்தவன் யாரென்றால், கிறீஸ்தவ கல்வியின்பேறுய்த் தேவஇஷ்டப்பிரசாதத்தில் பங்குபற்றிக் கிறீஸ்துநாதரின் முன்மாதிரிகைப் படிப்பனையாகிய ஞானவெளிச்சத்தினால் விளக்கமாகும் புத்திமூலம் சகலத்தையும் பகுத்தறியவும், கணிக்கவும், எப்போதும் எக்கருமத்திலும் அவ்வறிவின்படிநடக்கவும் கூடியவனும்." இதுவே கிறீஸ்தவகல்வியின் சிறந்தநோக்கம். ஆயின் இதை நாம்அடைந்துகொள்வது எப்படி? கிறீஸ்தவகுடும்பத்தின் மூலமாகவும், கத்தோலிக்கபாடசாலைகள் மூலமாகவுமே அடையலாமென்பது நமது விடையாகும்.

## 2. வீட்டுக்கல்வி

ஞானஸ்நானமென்னும் தேவதிரவிஅனுமானத்தைப் பெற்றுக்கொள்ளும்பொழுதே கிறீஸ்தவகல்வி ஆரம்பிக்கின்றதெனலாம். ஞானஸ்நானத்தின் வழியாய் நாம் கிறீஸ்துநாதரை அணிந்துகொள்ளுகிறோம். அவருடன் ஐக்கியப்படுகிறவர்களாகிறோம். ஆயினும்நாங்கள் கிறீஸ்துநாதரின் போதனைக்கும், சாதனைக்கும்இணங்க எண்ணவும், யோசிக்கவும், ஒழுகவும் அறிந்துகொள்ளும்வரையும் எமதுமாற்றம் பூரணம்பெறாது. ஆகையாற்றான் எங்கள்பிள்ளைகளைக் கிறீஸ்தவமுறையில் உறுதியாகப்பயிற்றுவது அத்தியாவசியமாகின்றது.

13-ம் சிங்கராயபாப்பானவர் கூறுவதாவது: "தங்கள்பிள்ளைகளைக் கிறீஸ்தவநெறியிற் பயிற்றுவதற்குக் கிறீஸ்தவ பெற்றோரே சுவாபமுறையிலும், சுவாபத்திற்குமேலானமுறையிலும் தகுதிஉள்ளவர்களாகின்றனர். சுபாவமுறையிற் பிள்ளைகளைப்பயிற்றுவதில் பெற்றோர் பூரணஉரிமை உள்ளவர்கள். அத்துடன் அப்பிள்ளை எக்கதிக்காகத் தேவஆசீர்வாதத்துடன் உண்டாக்கப்பட்டதோ, அக்கதியை அடைவதற்கேற்ற கல்வியையும், பயிற்சியையும்கொடுக்கப் பெற்றோர் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய குணாதிசயங்கள் இயற்கையாகவே பொருந்தியிருக்கின்றன. ஏனெனில்,பெற்றோர்தங்கள்பிள்ளைகள் மட்டிற்கொள்ளும் தன்னயங்கருதா அன்பும், பட்சமும் அவர்களுக்கு இக்கடமையை இலகுவாக்கி, இன்பமுள்ளதாக்கிவிடுகின்றது.

சுவாபவத்துக்குமேலானமுறையிலும் கிறீஸ்தவபெற்றோர் தங்கள்பிள்ளைகளை வளர்த்துப் பயிற்றுவதற்கு விசேட யோக்கியதை உடையவர்கள். ஏனெனில், பதினொராம்பத்திநாதர் சொல்வதுபோல "மெய்யான தேவதிரவிய அனுமானம் இடஷ்ப்பிரசாதத்தை அதிகரிக்கச்செய்கிறது மாத்திரமல்ல, இயற்கைத்தத்துவங்களை உயர்த்திப் பூரணப்படுத்துவதினால் விசேட கொடைகளையும், பக்குவங்களையும், வரப்பிரசாதங்களையும் கொடுத்து மெய்விவாகஅந்தஸ்தில் உள்ளவர்கள் தங்கள்அந்தஸ்திற்கு உரிமையானவைகளையும், அதன்நோக்கங்களையும், கடமைகளையும் விளங்கிக்கொள்ளச் செய்கிறது மாத்திரமல்ல, அவைகளை ஆழமாய் அறியவும், உறுதியாய்ஆசிக்கவும், கடைப்பிடித்துப் பலனுள்ளவிதமாக நிறைவேற்றவும் உதவிபுரிகின்றது. ஈற்றில், தங்கள்அந்தஸ்தின் கடமைகளை நிறைவேற்ற அவர்களுக்குஅவசியமான அனுக்கிரகப் பிரசாதங்களுக்கும் உரிமை தருகின்றது" (சுற்று நிருபம்)

சகலகிறீஸ்தவ பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்கு வேதசத்தியங்களையும், தேவகற்பனைகளையும், திருச்சபைக்கட்டளைகளையும் மெய்மையாகப்போதித்துத்தங்கள்பிள்ளைகளைவேதஅறிவிலும் ஒழுக்கத்திலும் வளர்த்துவரவேண்டிய பொறுப்புடையோராய் இருக்கின்றனர். இந்தப்பொறுப்பு அவர்கள் குருவானவரிடமோ, அல்லது ஆசிரியரிடமோ ஒப்படைக்க முடியாதவிதமாய் அவர்கள்மேற் சுமத்தப்பட்ட சொந்தக்கடமையாகின்றது. துர்அதிஷ்டவசமாக இதுபெரும்பாலும் மறந்துவிடப்படுகின்றது. ஆயினும், இது பெற்றோரின்உரிமையும், பாக்கியமும், கடமையுமாகும். "தம்மிடம் பாதுகாவலாக ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள்மட்டில் இக்கடமையைப் பெற்றோர் எவ்வாறு நிறைவேற்றினார்கள்என்று சருவேசுரனுக்குக் கணக்குக்கொடுக்க வேண்டியவர்களாகிறார்கள்." (கூட்டு நிருபம்)

வேதத்திலும், நல்லொழுக்கத்திலும் கொடுக்கப்படவேண்டிய பயிற்சியைப் பாலியவயதில்இருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில், குழந்தையின் மனம் மெழுகைப்போல் மென்மையாயும், பதியக்கூடியதாயும் இருப்பதுமல்லாமல், இளக்கமும் இணக்கமுமாயும் இருக்கின்றது. "தான் கொண்ட வழியேபோகும் வாலிபன் வயோதிபத்திலும் அதைவிட்டகலான்" என்று வேதம்ஓதுகிறது. (பழ. 22 : 6) இன்னும் "உனக்குப் பிள்ளைகள் உண்டா? அவர்களுக்குப்போதித்துப் பாலியத்திலிருந்தே அவர்களைவணக்கிவா." (எக்கிளே. 7: 25) என்றிருக்கிறது.

ஆகையால், தொட்டிலிற் பழக்கம் சுடலைமட்" டென்பதற்கொப்ப, நல்ல கத்தோலிக்கபெற்றோர் தங்கள்குழந்தைகள் மழலைமொழிபேசத் தொடங்கும்பொழுதே யேசு, மரியாய்என்னும் அமிர்தநாமங்களை உச்சரிக்கப்பழக்குவார்கள். உத்தமதாயானவள் தன் பிள்ளை வளரவளரச் சிலுவைஅடையாளத்தைப் படிப்பித்து மூவர் ஒன்றான அர்ச். திரித்துவத்தின் திருநாமத்தை அடிக்கடிஉச்சரிக்கப் பழக்குவாள். பழைய, புதியஏற்பாட்டுச் சரித்திரங்களைச் சொல்லி மனதில்நல்லெண்ணங்களைப் பிறப்பிப்பாள். படிப்படியாகப் பரமண்டலமந்திரமும், பிரியதத்தமந்திரமும், மற்றும்செபங்களும் சொல்லிக்கொடுப்பாள். காலையில் எழுந்தவுடன் பிள்ளையானது தன்இருதயத்தைச் சருவேசுரனை நோக்கி எழுப்பி அன்றிரவுமுழுவதும் அவர் தன்மீது இரக்கம்வைத்துத் தன்னைப் பாதுகாத்ததற்கு நன்றிகூறவும், அந்த நாள்முழுவதற்கும் அவருடைய உதவியை வேண்டிக்கொள்வதற்கும் பழக்குவாள். அசனத்துக்கு முன்னும்பின்னும் செபிக்கச்செய்வாள். மேலும் இரவானதும் அயர்ந்துகண் தூங்குமுன் தாயின்மடியிலோ, அன்றேல் படுக்கை அருகிருந்தோ தன்னைப்படைத்தகடவுளுக்கு நன்றித்துதிசெலுத்தவும்பிள்ளை பயிற்றப்படவேண்டும். இன்னும் நல்ல கத்தோலிக்க தாய்தந்தையர் தங்கள் பிள்ளைகள் இளம்பிராயமாய் இருக்கும்பொழுதே அவர்களைக்கோவிலுக்குக் கூட்டிச்செல்வது மாத்திரமல்ல, பக்திவணக்கத்துடன் அதிபூசித பூசைப்பலிக்குச் சமுகமாயிருக்கவும், அர்ச்சியசிஷ்டர்களைச் சங்கிக்கவும், விசேஷமாய் "சிறுபிள்ளைகளை நம்மிடத்தில் வரவிடுங்கள்; தடைசெய்யாதீர்கள்" என்று திருவுளங்கனிந்த யேசுநாதர்பேரில் உருக்கமான அன்பு கொள்ளவும் கற்பிப்பார்கள்.

பிள்ளைகள் வளரவளர அவர்களை ஞானத்திலும், பக்தியிலும் அதிகரிக்கச்செய்தல் பெற்றோர்மேற் சுமந்த கடனாகும். அவர்களுடையமனதில் வேதஉணர்ச்சிகளையும், இருதயத்தில் உதாரசிந்தையையும் உண்டாக்குவதில் எச்சந்தர்ப்பத்தையுங் கைநெகிழவிடக்கூடாது. அவர்களுடைய விளையாட்டுக்கருவிகளையும், விளையாட்டுகளையும் நல்லறிவுஊட்டுவதற்கு ஏற்ற தருணமாக உபயோகித்துக்கொள்ள வேண்டும். அறிவுவிருத்தி அடைவதுடன் பச்சாத்தாபம், நற்கருணைஆதிய தேவதிரவியஅனுமானங்களாலும், அமலோற்பவமாதாவின் பக்தியாலும் அவர்களுடையஇருதயங்கள் புனிதமடையவேண்டும். அவர்கள் குடும்ப செபமாலையிற் பங்குபற்றுவது இன்றியமையாதது.

நற்பழக்கங்களை உண்டாக்குவது பிள்ளைவளர்ப்பில் அவசியமான ஒரு அம்சமாகும். இதற்குப் பாலியப்பிராயமே இன்றியமையாத பருவம். ஏனெனில், "ஐந்தில்வளையாதது ஐம்பதில் வளையாது." பழக்கங்கள் நன்மையாகவோ அன்றேல் தீமையாகவோ இருப்பது பெற்றோரைப்பொறுத்தது. அவர்கள் தங்கள்பிள்ளைகளிடம் நற்பழக்கங்களை நிலைக்கச்செய்து, தீயவைகளை நீக்கிவிடவேண்டும். இது சித்திக்கும்பொருட்டு பிரம்பைஉபயோகிப்பது அவசியமாய்இருந்தால் அதை உபயோகிக்கத் தயங்கக்கூடாது. "பிரம்பை வழங்காதவன் தன்மகனை வெறுக்கிறான்; ஆனால், பிள்ளையை நேசிக்கிறவன் அவனை நேரத்தோடு தண்டிக்கிறான்." (பழ. 13: 24) இளம்வயதிலிருந்தே பிள்ளைகள் பெற்றோரையும் பெரியோரையும் கனம்பண்ணி அவர்களுக்குஅமைந்துநடக்கப் பழக்கவேண்டும். "அவன் இளமையாய் இருக்கும்பொழுதே அவன் முதுகை ஒடி" என்று வேதம்சொல்லுகிறது. "அவன் பிடிவாதம்கொண்டு உன்னை மதியாமல் இருக்கவிடாமலும், உன் மனதிற்குத் துன்பமாய்இராமலும் இருக்கும்வண்ணம் அவன்விலாக்களை நன்றாய்ப்புடை" (எக்கிளே. 30: 12) ஆயினும் பிள்ளைகளின் குற்றங்களுக்காகத் தண்டிக்கும்பொழுது பெற்றோர் பொறுமையீனத்தையும், விவேகமற்ற மிதமிஞ்சியதண்டனையையும் விலக்கவேண்டும். "பிதாக்களே! உங்கள் பிள்ளைகளுக்குக் கோபமூட்டாதேயுங்கள்" என்கிறார் அர்ச். பவுல்அப்போஸ்தலர். (எபேசி. 7:4.) "பெற்றோரும், அவர்களிடமாய்ப் பிள்ளைகளைப் பயிற்றும் மற்றோரும் தாங்கள் சருவேசுரனுடையபதிலாளிகள் என்பதை உணர்ந்து தங்கள்அதிகாரத்தை முறையாகஉபயோகிப்பதில் கவலைகொள்ளக்கடவார்கள்" என்று விளக்குகிறார் பதினொராம்பத்திநாதர். இந்த அதிகாரம் அவர்களுடைய லாபத்திற்கல்ல, அவர்கள்பிள்ளைகளை "ஞானத்தின் தொடக்கமான பரிசுத்த தேவபயத்தில்" சரிவர வளர்ப்பதற்காகவே தரப்பட்டிருக்கின்றது. சகலஅதிகாரிகளுக்கும் காட்டவேண்டிய அமைச்சல் இந்தஅஸ்திவாரத்திற்றான் உறுதியாக நிலைக்கவேண்டும். (சுற்றுநிருபம் தேவகுருவின்.)

பிள்ளைகளுடையகுற்றங்களைத் திருத்தும்நோக்கமாகவும், அவர்களை உத்தமகிறீஸ்தவ சீவியத்தில் வழிநடத்தும் பொருட்டும் பெற்றோர் வாலிபவயதுப் பிள்ளைகள்மட்டில் அதிககவனம் செலுத்துவதுஅவசியம். வாலிபப்பருவத்தின் ஆபத்துக்கள் யாவரும் அறிந்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதலின் அவற்றைப்பற்றி இங்குஅதிகம் விளக்கவேண்டிய அவசியமில்லை. வாலிபப்பருவம் பிள்ளையின் சரீரத்திலும், புத்தியிலும், மெய்ப்பாட்டுணர்ச்சியிலும் அநேகமாறுதல்களை உண்டாக்குகிறபடியால் தீயஏதுக்களால் அதிகமாய்த் தாக்கப்படவும, பொதுவுடைமை, சமரசம், எம்மதமும்ஒன்றே என்ற பலவிகற்ப பொய்க்கொள்கைகளுக்கு இலகுவாய் இரையாய்ப்போகவும்கூடிய ஆபத்துநிறைந்த பருவமாகும். ஆகையால், இந்தஆபத்தான தருவாயில் பிள்ளைகளுக்குச் சரியான வழிகாட்டுதல் அத்தியாவசியமாகின்றது. இத்துடன் பிள்ளைகள் வாசிக்கும் நூல்கள், போகும்இடங்கள், கூடும் சிநேகிதர்கள், ஓய்வுநேரத்தைச் செலவிடும்விதம் என்பவைகளை விழிப்பாகக் கவனிக்கவேண்டியதும் பெற்றோரின் கடனாகும். நமதுமேற்றிராசனத்திலுள்ள வாலிபர் தங்கள்ஓய்வுநேரத்தைச் சந்தைசாவடிகளிலும், தெருத்திண்ணைகள், மூலைமுடக்குகளிலும் இருந்து வீணேகழிப்பது நமக்கு மிகவும்மனவருத்தத்தைத் தருவதாகும். ஓய்வுநேரத்தை உபயோகமானஅப்பியாசத்திற் செலவிடும்படி அவர்களை ஏவுவதோடு, அதற்குவேண்டிய சாதனங்களை அமைத்துக்கொடுக்குமாறும் அவர்கள்பெற்றோரையும், பங்குக்குருமாரையும் வினயமாய் வேண்டுகின்றோம்.

மிகவும்அருமையான பெற்றோரே! சினிமாப்படக் காட்சியினால்வரும் ஆபத்துக்களைப்பற்றி விசேடகவனம் செலுத்தும்படி உங்களைக் கேட்கிறோம். "கெட்டபடங்களால் ஆத்துமத்திற்கு எவ்வளவு ஆபத்து உண்டாகிறதென்பது யாவரும்அறிந்ததே" என்கிறார் பதினொராம்பத்திநாதர். அவைகள் பாவச்சமயங்கள், ஆசாபாசங்களை மேன்மைப்படுத்திக் காட்டுவதினால் வாலிபரைத் தீயவழிகளில் கவர்ந்து செல்லுகின்றன. மனிதசீவியத்தைப் பிழையானரீதியில் சித்திரிக்கின்றன. இலட்சியங்களை மறைக்கின்றன; தூய அன்பையும், மெய்விவாகத்தின் மகிமையையும், குடும்பங்களில் இருக்கவேண்டிய அந்நியோன்னியத்தையும் கெடுக்கின்றன. அவைகள் தனிமனிதரிடையே தப்பெண்ணங்களையும், தேசங்களுக்கிடையிலும், வகுப்புகளுக்கிடையிலும், சாதிசனங்களுக்கிடையிலும் மனஸ்தாபங்களையும் உண்டுபண்ணக்கூடியவை." (சுற்றுநிருபம்) திரையிற்காட்டப்படும் எல்லாப்படங்களையும் பாகுபாடின்றி நமதுவாலிபர் அடிக்கடி பார்க்கப்போவதை நாம்மனவருத்தத்துடன் கவனித்திருக்கிறோம். மிகவும்அருமையான பெற்றோரே! இது விஷயத்தில் உங்கள் பிள்ளைகள்மேல் மிகவிழிப்பாய் இருக்கும்படியும், நீங்களோ, அன்றேல் உங்கள்கட்டளைக் குருமாரோ அப்படங்கள் தீங்கற்றவை என்ற முடிவுகூறுமுன் பிள்ளைகள் அவைகளைப் பார்க்காதிருக்கும்படியும் நீங்கள் தடுக்கவேண்டுமென வற்புறுத்துகிறோம்.

பிள்ளைகளுக்கு வீட்டில் தேசஒழுக்கக்கல்வி கற்பிப்பதும் தாய்தந்தையரின் கடமையாகும். ஒரு உத்தம கத்தோலிக்கன் தனது கத்தோலிக்க ஒழுக்கப் பயிற்சியின்பயனாய்த் தன் தாய்நாட்டில் பற்றுதல்கொண்டு முறையான அரசாட்சியில் பதவிவகித்திருக்கும் சகல அதிகாரிகட்கும் அபிமானம்நிறைந்த அமைச்சல் காண்பித்துச் சிறந்த பிரசையாகின்றான் (சுற்றுநிருபம்) என்பதைப் பிள்ளைகள்மனத்தில் அழுத்தமாகப் பதிக்கவேண்டும்.

இதுவரையும் மிகவும்அருமையான பெற்றோரே! உங்கள்பிள்ளைகளை வீட்டிற் பயிற்றுவதைப்பற்றிய கடமைகளைக் குறிப்பிட்டுள்ளோம். நல்லொழுங்குள்ள — கட்டுப்பாடுள்ள கிறீஸ்தவகுடும்பத்திலே கிடைக்கும்பயிற்சிகள்தான் அதிகப்பற்றாய்ப் பலனளிப்பனவும், நிலைநிற்பனவும்என்பதை உங்கள் நினைவிலிருத்த விரும்புகிறோம். தெளிவான, கடைப்பிடியான நன்மாதிரிகை வீட்டிலே முதல் பெற்றோராலும், பின்பு அவ்வீட்டிலுள்ள மற்றவர்களாலும் காட்டப்படும்அளவிற்குப் பிள்ளைகளின்பயிற்சியும் பலனுள்ளதாயிருக்கும் (சுற்றுநிருபம்). "தந்தைஎப்படி, தனயன் அப்படி"; "தாயைப் போலப் பிள்ளை, நூலைப்போலச்சீலை" என்பது நீங்கள் அறிந்தவைகளே. ஆகையால், பெற்றோர் தங்கள் தனிச்சீவியத்தையும், குடும்பசீவியத்தையும் எங்கள்ஆண்டவருடையவும், திருச்சபையுடையவும் படிப்பனைக்கேற்க அமைத்துக்கொள்வார்களாக! பிள்ளைகளுக்கு வேத, சன்மார்க்க, சரீர, தேசாசார சம்பந்தமான பயிற்சியளிப்பதில் தங்களுக்குள்ள நானாவிதபொறுப்புகளை அதிகமதிகமாய்அறியவும், அவைகளை நிறைவேற்றுதற்குச் சிறந்தவழிகளை ஆராயவுங்கடவார்கள். அப்பொழுதுதான் தங்கள்பிள்ளைகளுக்கு உபயோகமான கத்தோலிக்ககல்வி அளிக்கக் கூடியவர்களாவார்கள்.

### 3. பாடசாலைக் கல்விப்பயிற்சி

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வேத, சன்மார்க்க, சரீர, தேசாசார சம்பந்தமான பயிற்சியளிக்கக் கடமைப்பட்டிருப்பதோடு, அவர்கள் உலகத்தில் வாழ்தற்கு அவசியமானபயிற்சியும் கொடுக்கக் கடமையுடையோராகிறார்கள். இதற்குப் பலகலைகளிலும், விஞ்ஞானத்திலும பயிற்சி வேண்டியிருப்பதாலும், தாய்தந்தையர் இப்பொறுப்பை ஏற்க இயலாதவர்களாயிருப்பதாலும் பாடசாலைஎன்கிற சமுதாயதாபனம் அவர்களுக்குஉதவ முன்வருகின்றது. கத்தோலிக்கதிருச்சபை தனதுபிள்ளைகள் கத்தோலிக்க கல்விச்சாலையிலே பயிற்றப்பட வேண்டுமென்று விரும்புவது ஏன்என்பது தானேபோதரும். கத்தோலிக்கவிசுவாசத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் விரோதமான தொன்றுமில்லாத பாடசாலைகளிலேயல்ல, வேதமும், நல்லொழுக்கப்பயிற்சியும் முதலிடம்பெறும் பாடசாலைகளிலேயே கத்தோலிக்க பிள்ளைகள் பயிற்றப்படவேண்டும்" (C. 1372)என்று திருச்சபை ஆஞ்ஞாபித்திருக்கிறது. மேலும் கத்தோலிக்க பாடசாலைகள்அல்லாத, அல்லது நடுநிலைமைவகிக்கும், அல்லது கலவன் பாடசாலைகளில் அதாவது கத்தோலிக்கர்அல்லாதாருக்கும் உரிமையுள்ள பாடசாலைகளில் கத்தோலிக்க பிள்ளைகள் கல்விகற்கக் கூடாதென்றும் (C. 1374) விதிக்கிறது.

பிறசமயிகளான சைவர், புத்தர், முஸ்லீம்கள், புறொட்டஸ்தாந்தர் நடத்திவரும் பாடசாலைகளைச் சற்றே ஆராய்ந்துபார்ப்போம். கத்தோலிக்க சமயக்கல்வி முற்றாய்நீக்கப்பட்ட, அல்லது கத்தோலிக்கசமயத்தை எதிர்க்கும்நோக்கமாக மாறானகல்வியூட்டப்படும் பிறசமயபாடசாலையில் பயிற்றப்படும் கத்தோலிக்கமாணவன் தன் பயிற்சிமுடிந்து வெளிவரும்போது நிச்சயமாகவே விசுவாசமற்றவனாய் இருப்பான். ஏனெனில், அவன் அங்கு பிறசமயப்போதனையைக் கேட்காதுபோயினும் மேற்கூறிய இருநோக்கங்களைக் கொண்ட அப்பாடசாலையின் சூழல் அவனைப்பாதிப்பதால் அவனுக்கு இக்கதி நேருகின்றது.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாழ் தொழா அரெனின்."

இறுதியில்அவன் விசுவாசத்தை மறுதலித்துவிடுவதே சாதாரண முடிவாகும்.

சமயச்சார்பற்ற, அதாவது கத்தோலிக்கரும், இதரமதத்தினரும் கற்கக்கூடிய அரசினர்பாடசாலையை எடுப்போம். எந்தமதத்திற்கும் அங்கு விசேஷசலுகை காட்டப்பட மாட்டாது என்பது அவற்றின்கொள்கை. இத்தாபனங்களில் எல்லாச்சமயங்களும் சமமாகநடத்தப்படும். வெவ்வேறு சமயத்தவர்களால் ஆங்காங்கு கற்பிக்கப்பட்ட உபாத்தியாயர்கள் அந்தந்த மாணவர்கள் அனுசரிக்கும் சமயத்தைப்பற்றிப் போதனை செய்வார்கள். ஆனால், மற்றப்பாடங்கள் கத்தோலிக்கரல்லாத, அல்லது வேதவிரோதிகளான ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். "ஒருபாடசாலையில் ஏதோ பரும்படியான சமயபாடம் கற்பிக்கப்படுகிறதென்றாற்போல அது கத்தோலிக்க மாணவருக்கேற்ற பாடசாலையாகாது" என்கிறார் பதினொராம்பத்திநாதர். ஏனெனில், கத்தோலிக்கரல்லாத, அல்லது கத்தோலிக்கசமயத்திற்கு விரோதிகளானஉபாத்திமார் மாணவர்களில் கொண்டிருக்கும் அதிக செல்வாக்கினாலும், பிறசமயமாணவர்களுடன் அடிக்கடி நெருங்கிப்புழங்குவதாலும், பொதுவில் சமயப்பற்றற்ற அப்பாடசாலையின் சூழலாலும் பேராபத்து உண்டாகின்றது. இப்படிப்பட்ட கல்விநிலையங்களில் பெறப்படுங்கல்வி சாதாரணமாகச் சத்தியவேதத்தில் வேண்டாவெறுப்பை உற்பத்தியாக்கும். கத்தோலிக்கராகியநாம் இதை அரோசித்து வெறுக்கவேண்டியது. ஏனெனில், எமதுவேதமே உண்மையானதென்றும், மனிதர் இரட்சணியமடைய அதுவேவழியென்றும் நாம் விசுவசிக்கின்றோம். மேற்கூறிய ஆபத்துகள் அதிகமாய் விரைவிலே உண்டாகிறபடியால் பெற்றோரும், பிள்ளைகளைப்பராமரிப்போரும் தங்கள் பிள்ளைகளைப் பிறசமய பாடசாலைகளுக்கு அனுப்புவது இயல்பாகவே கனமான குற்றமாகும்.

ஒருகத்தோலிக்கபிள்ளை கத்தோலிக்கபாடசாலைக்குப்போக இயலாமற்பண்ணும் சிலசந்தர்ப்பங்கள் இருக்கக்கூடும். அச்சந்தர்ப்பங்களில் அதை நமக்கு அறிவித்தால், நியாயத்தை ஆராய்ந்து என்னநிபந்தனைகளுடன் ஓர்கத்தோலிக்கபிள்ளை பிறபாடசாலைக்குப் போகலாம்என்று நாம் முடிவு செய்வோம் (C. 1347). ஆயினும் இப்படிப்பட்ட உத்தரவை மிகவும்அரிதாக, இன்றியமையாத சந்தர்ப்பங்களில்மாத்திரமே கேட்க வேண்டுமென்று உங்களைஎச்சரிக்கின்றோம். நமதுநன்மையில் ஆர்வமிகுந்த தாயாகியதிருச்சபையின் இந்தப்படிப்பனைகளைப் பெற்றோரும், அவர்களிடமாய்க் கடமையாற்றுவோரும் நன்குஉணரக்கடவார்கள். இவைகளை மீறுவோருக்குத் திருச்சபை கண்டிப்பானஎச்சரிக்கை கொடாமலில்லை. "பெற்றோரும், அவர்களிடமாய்க் கடமையாற்றுவோரும் தங்கள்பிள்ளைகள் பிறசமயப் பாடசாலைகளில் கல்விகற்கவும், பயிற்றப்படவும் அனுப்புவார்களேயாகில் திருச்சபைக்குப் புறம்பாக்கப்படும் தண்டனையைத் தேடிக்கொள்வார்கள். இதைமன்னிக்க மேற்றிராணியாருக்கு மாத்திரமே தத்துவமுண்டு (C. 2319. 4.). மேலும் "நமதுஒழுங்குகளுக்கு மாறாக, தங்கள் மேற்றிராணியாருடைய உத்தரவில்லாமல் தங்கள் பிள்ளைகளைக் கத்தோலிக்கு அல்லாத (பிற)பாடசாலைகளுக்கு அனுப்பும்பெற்றோர் அல்லது பராமரிப்போர் இந்தக் குற்றத்தில் பிடிவாதங் காண்பிப்பார்களாகில், பச்சாத்தாப தேவதிரவிய அனுமானத்தில் பாவமன்னிப்படைய அபாத்திரராகிறார்கள்."

அருமையானபிள்ளைகளே! மேற்சொன்ன பிரமாணங்களுக்கிசைய நீங்கள் நடக்கத்தெண்டிக்கும்போது சில வில்லங்கங்களை நீங்கள் மேற்கொள்ள வேண்டிவரும்என்பது நமக்கு நன்றாய் விளங்கும். அரசாட்சியார் குறித்த சிலபிள்ளைகளுக்குத் தமதுபாடசாலைகளில் இலவசக்கல்விகற்க உதவிசெய்கின்றனர். இதைநீங்கள் இழக்க வேண்டிவரும். நமது கத்தோலிக்க பாடசாலைகளில்இருந்தும், கத்தோலிக்கஆதிக்கத்திலிருந்தும் இந்தமுதல் தரமான கத்தோலிக்கமாணவர்கள் நீங்கிவிட்டால், நமதுமேற்றிராசனத்திலுள்ள கத்தோலிக்கதிருச்சபையின் வருங்காலவளமை அற்றுப்போம்.

மிகவும் அரியபெற்றோரே, பாதுகாவலரே! வெறுந்தோற்றத்தாலும், பொருளாதாரநன்மையாலும் அனுப்பப்பட்டுப் போகாவண்ணம் உங்களுக்குப் புத்திகூறுகிறோம். அரசாங்க பாடசாலைகள் சிறந்த கட்டடஅமைப்பையும், முதல்தர ஆசிரியர்களையும் கொண்டுவிளங்கிஇலவசக்கல்வியையும், வேறுவசதிகளையும் உதவக்கூடும். ஆயினும் நமதுபாடசாலைகள் இலங்கையிலுள்ள வேறுஎந்தப் பாடசாலைகளிலும் ஒழுக்கமுறையிலோ, அன்றேல் கல்வித்திறத்திலோ சிறந்தனஎன்பது உங்கள்எல்லோருக்குந் தெரியும். இலவசக்கல்வியோ, அல்லது வேறுவகையான உதவிகளோ, நமது பாடசாலைகளில்கற்கும் தகுதிவாய்ந்த ஏழைவான கத்தோலிக்க மாணவருக்கு நம்மாலியன்றளவு கொடுக்கப்படுகின்றன. நமது பரிசுத்தஇரட்சாபெருமான் கூறியவற்றையும் நினைவுகூருங்கள்: "ஒருவன் உலகம்முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமத்தை இழப்பானேயானால் அதனால் வரும் நன்மையென்ன?" (மார்க்கு 8: 36, 37) அல்லது "தனதுஆத்துமத்தின் பெறுமதிக்கீடாக மனிதன் வேறு எதைக் கொடுக்கமுடியும்?" பிறசமயப் பாடசாலைகளுக்கு உங்கள்பிள்ளைகளை அனுப்பி நீங்கள்பெறக்கூடிய உலக நன்மைகளிலும், உங்கள்பிள்ளைகள் பெறுகின்ற ஆன்மஇரட்சணியம் மேலானதாகவும், அவசியமானதாகவும் இருக்கவேண்டியது. இதுவே நீங்கள்வைத்திருக்கும் பொருள்பண்டங்கள்எல்லாம் விற்றுப்பெறவேண்டிய விலைமதித்தற்கரிய முத்தாகும். உங்கள்மூதாதையர் தங்கள் ஆத்துமவிஷயத்தில் நடந்துகொண்டவிதத்தை நினையுங்கள். அவர்கள் தங்கள்பிள்ளைகளைப் புறொட்டஸ்தாந்த பாடசாலைகளுக்குஅனுப்பி விசுவாசபங்கம் உண்டாக்குவதிலும் தம் வீடுகளிலேயே வைத்திருப்பதுமேல்என்று எண்ணி இலவசகல்வி கற்பிப்பதை நிறுத்திக்கொண்டார்கள். உங்கள் முன்னோருக்கு உகந்தபிள்ளைகளாக நீங்களும் இருக்கவேண்டியது.

### 4. கத்தோலிக்க பாடசாலைகள்

நமதுபாடசாலைகளைப்பற்றிக் குறிப்பாகச் சிலவிசேஷகாரியங்களைக் கூறுவோம். உண்மையான கத்தோலிக்க பாடசாலையில் "சிறுவருக்குக் குறித்த குறித்தநேரங்களில் சமயபாடம் கற்பிக்கப்படவேண்டும். அத்துடன் கற்பிக்கப்படும் ஏனையபாடங்களும் கத்தோலிக்ககொள்கைகள் செறிந்தவண்ணம் ஊட்டப்படவேண்டும்" என்று 13-ம் சிங்கராயபாப்பானவர்கூறுகிறார். இவ்வண்ணம் இல்லாவிடில்-ஆசிரியரையும், மாணவரையும் கத்தோலிக்கசூழல் பாதிக்காவிடில் எவ்வகையான கல்வியிலும் சொற்பபிரயோசனமே பெறப்படும். முடிவில் அதிகதீமை ஏற்படும். இவ்வகையான கல்விக்கழகங்களில் ஏனையசாஸ்திரங்கள் சமயகல்வியோடு முரண்படாமல் இருக்கும். ஆகையால் பிள்ளைகளின் கல்விவளர்ச்சிக்கு இடையூறு ஆகாது.

நமதுபிள்ளைகள் கத்தோலிக்க கொள்கைக்கு மாறானகொள்கைகள் உள்ளநூல்களைப் படிக்கவேண்டிய போது நமதுபாடசாலைகளில் கொடுபடும் நல்லகல்விமுறைகளாலும், தக்க ஆயத்தத்தோடு பிள்ளைகள்கற்பதாலும் அவர்கள் திடப்பட்டு விசுவாசக்குறைவு வாராமல் தங்களைக் காத்துக்கொள்ளக் கூடியோராவார்கள். அத்தோடு நமது கல்விமுறையே அவர்கள் கத்தோலிக்க பண்பாடுள்ள வாலிபராவதற்கும் உதவியாகும். (11-ம் பத்திநாத பாப்பானவா O. C.) இப்புத்திமதியானது நமது தேசியஇலக்கியங்களைக் கற்பிப்பதில் நமக்கு உதவியாகின்றது. மேற்சொன்ன இலக்கியங்கள் பெரும்பாலும் கத்தோலிக்கஎண்ணங்களும், கொள்கைகளுமற்றவை. இவற்றைக் கற்பிக்கும்போது கத்தோலிக்கஆசிரியர் நீர்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கிப் பாலுணனும் அன்னத்தின் விவேகத்தைத் தாமும்கொண்டு பிரயோசனமானவற்றைக்கற்பித்து ஏனையவற்றை நீக்கவேண்டும்.

நமதுதேசப் பண்பாட்டுமுறைகளைப் பற்றிய கல்வியும் நம்முடையபாடசாலைகளில் இடம்பெறவேண்டும். திருச்சபையானது ஆதிதொடக்கம் இக்காலம்வரையும் இந்நன்மையான ஒழுக்கமுறைக்கல்வியைக் கைவிடாமல் பின்பற்றிவருகின்றது என்கிறார் நமது பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதர். பரிசுத்தசுவிசேஷம் போதிக்கப்படும் எப்புதியதேசத்திலும் அது அங்குள்ளார் கைக்கொள்ளும் நீதியான, அல்லது அழகிய, அன்றேல் இயல்பிலேயே நன்மையைக்கும் கொள்கைகளை அழிக்காது அல்லது நாசஞ்செய்யாது விடக்கடவது. ஏனெனில், திருச்சபை மனிதரை உயர்த்தபண்பாட்டுக்கும், சிறந்த சீவியவழிக்கும் கத்தோலிக்கஉணர்ச்சி முறையாகக் கொண்டுவர அவர்களை அழைக்கும்போது இயல்பாகவே செழித்துஓங்கி வளர்ந்துவரும் கலைவொழுக்க வழக்கங்களை அழிப்பதில்லை. அன்றியும் காட்டுமரம் இனியபழங்களைத் தரும்படி அதில் நலவிதைகளை ஒட்டவைப்பதுபோல, திருச்சபையும் அந்நாட்டுச் சாஸ்திரங்களை வெறுத்துத்தள்ளாது, அவற்றிலுள்ள பிழைகளைநீக்கிக் கிறிஸ்தவ படிப்பினையால் திருத்தப்படுத்திவிடுகின்றது. இவ்வாறே அது தன்னுடைய சொந்தப் பண்பாட்டையும், கலையையும் ஆக்கிக்கொள்ளுகின்றது. மேலும் தேசிய பழக்கவழக்கங்களையும், பழைய அநுசாரணைகளையும் நீக்காது அவற்றைக்காப்பாற்ற முயற்சிக்கிறது. பிழைகளோடும், சகுன சாஸ்திர நம்பிக்கையோடும் சேராமல் இருக்கும் அக்காட்டுப் பழக்கவழக்கம் எதுவாயினுஞ்சரி அன்பாய்ப்பரிசீலிக்கப்பட்டு தேவையானபோதெல்லாம் நீக்கப்படாமல் காப்பாற்றப்படுமென்கிறார், பின்னும் 12-ம் பத்திநாதபாப்பானவர்.

## 5. கத்தோலிக்க ஆசிரியர்கள்

எமது கத்தோலிக்கபாடசாலைகளில் ஊட்டப்படும் கல்வியால் ஆகும்நற்பயன் முழுவதும் கத்தோலிக்க ஆசிரியர்களிலேயே தங்கியிருக்கிறது. சிறந்தகல்வி நிலையங்கள் நலஆசிரியர்களால் ஆக்கப்படுவனவேயன்றி மேலான முறைகளைக் கையாண்டுகற்பிப்பதனுல் உண்டாவனவல்ல. ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கவேண்டிய விஷயங்களில் ஆழமான அறிவும், தகுந்தஆயத்தமும் உள்ளவராக இருக்கவேண்டும். தங்களுடைய காரீத்திரமானதொழிலுக்கு அவசியம் வேண்டிய-சன்மார்க்கத்தைக்கும், யுக்திக்கும்அடுத்த தகைமைஉள்ளவராக விளங்கவேண்டும். இவர்கள்யேசுநாதரிலும்திருச்சபையிலுமுள்ளநேசத்தின்நிமித்தம் திருச்சபையின் அருமையான பிள்ளைகளான தங்கள்மாணவரைப் பரிசுத்தஅன்பினுல் பரிபாலிக்க வேண்டும். மேலும் குடும்பங்களினதும், தேசத்தினதும் உண்மையான நலனை மனதாரவிரும்புபவோராக ஆசிரியர்கள் இருக்கவேண்டும்.

மிகவும்அரிய ஆசிரியர்களே! நீங்கள் பிள்ளைகளின் புத்திவளர்ச்சி, தேகவளர்ச்சிக்கு மாத்திரம் உத்தரவாதிகள் அல்ல; இவைகளிலும்மேலான அவர்களுடைய சன்மார்க்க, ஆன்மவளர்ச்சிகளுக்கும் நீங்கள் உத்தரவாதிகளாய் இருக்கிறீர்கள். யேசுநாதசுவாமி இரத்தஞ்சிந்திய அழியாத ஆத்துமங்களின் கதி உங்கள்கைகளிற் தங்கியுள்ளது. எமது மேற்றிராசனத்தில் அடங்கியுள்ள யேசுநாதசுவாமியுடைய திருச்சபையின் வருங்காலமும் உங்கள் கையிற்தான் தங்கியுள்ளது. உங்கள் தொழில் எவ்வளவு உன்னதமானதென்பதைக் கவனியுங்கள். "ஆன்மாக்களைப் பரிபாலித்து, வாலிபரை ஒழுக்கப்பண்பாடு உள்ளவர்கள் ஆக்குவதிலும் மேலாய்ச் செயத்தகும் காரியம்யாது? இளைஞரின் ஆத்துமத்தைச் செப்பனிடும்ஒருவரிலும் மைதீட்டும் வண்ண மகனோ, சிற்பியோ, ஓவியனோ சிறந்தவொன்று நாம் கருதமுடியாது." (அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர்.) ஆதலால் உங்கள்தகைமை அளவில் திருச்சபை உங்களிடத்தில் காத்திருப்பது என்னஎன்பதுபற்றியும் உணர்ச்சியுள்ளவர்களாய் இருங்கள்.

உங்கள்தொண்டு தேவஅழைப்பென்றும், அது உலகநன்மையைப் பெறுதற்குமாத்திரம்உரியதன்றென்றும்அறியுங்கள். உங்கள் தொழிலில் நேர்மையாகவும், பரித்தியாகங்களில் தாராளசிந்தையுடனும் இருங்கள். புதிய கல்விமுறைகளைக் கையாண்டு கற்பியுங்கள். உங்கள்விசுவாசஅறிவை விரிவடையச் செய்யுங்கள். அப்பொழுதே நீங்கள்கற்பிக்கும் இலக்கியம், கலை, சாஸ்திரவகைகளும், அவற்றின்மேலாகத் தத்துவசாஸ்திரஞானமும் விசுவாசத்தோடு ஒற்றுமைப்பட்டு நிலைக்கக் கூடியனவாய் இருக்கும். (13-ம் சிங்கராயபாப்பானவர்.)

## 6. குருமாரும், பாடசாலைகளும்

மிகவும் அருமையான சகோதரரே! நமது மீசாம்களுக்கும், பாடசாலைகளுக்கும் பொறுப்பாயுள்ள குருமாருக்கு இத்தருணத்தில் நாம் நினைவூட்டவிரும்புவது யாதெனில், உங்கள் பாடசாலைகளின் கல்விவிருத்தியையும், மாணவரின் ஒழுக்கமேம்பாட்டையும் கவனிப்பது உங்கள்கடமைகளில் பொறுப்பானதொன்றுகும் என்பதே. உங்கள்பாடசாலைகளிலிருந்து ஒரு கத்தோலிக்கபிள்ளையாவது நம்மைஅறியாமல் வெளியேற்றப்படாதிருக்க நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு கத்தோலிக்க மாணவனும் நமது பாடசாலைகளில் ஒன்றிலாவது நிச்சயமாய் இடம்பெறச்செய்வது உங்கள்கடமை. எங்கள் பாடசாலைகளைப்பற்றி அதிக பெருமை கொள்ளாதிருப்போம். கடந்தகால சிறப்புகளைமாத்திரம் நினைத்துக்கொண்டு இப்போது வாளாவிருக்கக்கூடாது. அரசாட்சியாரும், பிற பாடசாலைகளை நடாத்துவோரும் அதிதீவிரமாக எல்லாவழிகளிலும் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். நாங்கள் பிற்போக்கு அடையக்கூடாது. நமது பாடசாலைகளை முன்னேற்ற வேண்டும். போட்டியின் நிமித்தம் முன்னேறுமல், நமது கத்தோலிக்க மாணவருக்கு மிகவும்திறமையானதைக் கொடுக்கவேண்டும்என்ற ஆசையினுலேயே செய்யவேண்டும். நமது பாடசாலைக்கட்டடங்கள் திருத்தப்பட வேண்டும். சிறந்தஆசிரியரும், உபகாணங்களும் உள்ளனவாய் இருக்க வேண்டும். சரீரத்துக்குரிய, தேச ஆசாரத்துக்குரிய அறிவின்தாாதாம் உயர்த்தப்படவேண்டும். இவற்றிலும் மேலாக நமதுபிள்ளைகளுக்குக் கொடுக்கும் வேதஅறிவும், ஒழுக்கப்பயிற்சியும் மிகவும்சிறந்தனவாய் இருக்கவேண்டும். இப்பிரதானவிஷயத்திலே, அலட்சியமாய் இருப்பதால் நல்ல பக்திவைராக்கியமுள்ள கத்தோலிக்கசந்ததியினிடமாக ஞானதீட்சைபெற்ற, ஆனுல், கத்தோலிக்கவாசனை முற்றும்அற்றமக்கள் பலுகிவரநேரும்.

## 7. பள்ளிச்சிறநக்குப் புத்திமதி

பிரியமான பாடசாலைமாணவர்களே! நமதுமந்தையின் குட்டிகளான பாலர் நீங்களே. நமதுமேற்றிராசன திருச்சபையின் நம்பிக்கை நீங்களே. உங்களிலேயே திருச்சபையின் எதிர்கால சந்ததி முற்றும்தங்கியுள்ளது. உங்களுக்குச் சிறந்தகத்தோலிக்க கல்வியை ஊட்டுவதற்கு உங்கள்பெற்றோரும், உங்கள்குருமாரும், ஆசிரியரும், சிறப்பாகநாமும் செய்கின்ற அதிகமானபரித்தியாகமுயற்சிகளைச் சரிவர உணர்ந்து கொள்ளுங்கள். நமது பிரயாசைகளுடன் ஒத்துழையுங்கள். ஒழுங்காகப் பாடசாலைசென்று உங்கள்பாடங்களைக் கவனமாகப்படியுங்கள். ஏனெனில், இன்று நன்குபயிற்றப்பட்ட மாணவர்தான் நாளைத்தலைவர்களாக விளங்குவர்என்பது நீங்கள் அறிந்ததே. எல்லாவற்றிலும்மேலாக உறுதியான கத்தோலிக்க வேதஅறிவால் உங்கள் மனதை நிரப்புங்கள். வேதசத்தியங்களைப் படிப்பதில் ஆர்வம்கொண்டு இப்பொழுதே அவைகளை அனுசரிக்கப்பழகுங்கள். உங்கள்சீவிய முறையால் உங்கள் பிறசமயநண்பர்களுக்குக் கிறீஸ்துநாதரின் சுகந்தவாசனை வீசும்படி செய்யுங்கள். உங்கள்நன்னடத்தைகளால் அவர்கள் எங்கள்திருவேதத்தின் மேலானஅழகை விளங்கவும், விரும்பவும், மதிக்கவும், ஈற்றில் அதைஏற்கவும்தக்கதாய்ப் படிப்படியாய் வழிகாட்டுங்கள். உங்கள் பெற்றோரையும், உபாத்திமாரையும் கனம்பண்ணி அவர்களுக்கு அமைந்து நடவுங்கள். திருச்சபைக்கும், குருமாருக்கும் உண்மையானவர்களாயும், பற்றுள்ளோராயும் இருங்கள். அப்பொழுதே எங்கள்மேற்றிராசனத்திலுள்ள கிறீஸ்துநாதரது திருச்சபையின்பிற்காலம் உறுதியாயிருக்கும்.

## 8. இறுதிப்போதனை

அருமைப்பெருமையான சகோதரரே! பிள்ளைகளே!! காலத்தின்கோலத்தை நாம்சரிவரக் கணிக்கக்கூடுமாகில் சத்தியத்திற்கும் பொய்க்குமிடையில், நன்மைக்கும் தீமைக்குமிடையில், திருச்சபைக்கும் சாத்தானுக்குமிடையில் கோரப்போர்ஒன்று அண்மையில் நிகழவிருக்கின்றது. எங்கள் சத்துராதிகள் சண்டமாருத வேகத்துடனும், பாரியபிரளயத்துக்குரிய அழிக்குந்தன்மையுடனும் எங்களைத்தாக்குவார்கள். எங்கள்பிள்ளைகள் "அத்திவாரமாயிருக்கிறகிறீஸ்துநாதரில்," (1கொரி. 3: 11.) உறுதியாக்கப்பட்டிருந்தால், "எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து நாதரைப்பற்றிய உத்தமஅறிவை," (பிலிப். 3: 8) இறுகக் கைக்கொண்டிருந்தால், அதாவது வேதஅறிவும்,பக்திவைராக்கியமுமுள்ள கிறீஸ்துவர்களாய் இருப்பார்களேயாகில் இப்போராட்டத்தில் வெற்றியடைவார்கள் என்று நிச்சயமாகக்கூறலாம். ஆனுல், தற்போது மூண்டுகொண்டிருக்கும் போருக்கு அவர்களைத்தயார் செய்வது நமது பாரதூரமான கடமையாகும். "எங்கள் கத்தோலிக்க மக்களுக்கு அதிகமான-திறமையான பாடசாலைகள்" என்பதே நமது சுலோகமாயிருக்கவேண்டும். பள்ளிப்பருவமுள்ள எங்கள்பிள்ளைகள் சகலரும் கத்தோலிக்கபாடசாலைகளுக்கு ஒழுங்காகச் செல்லுகிறார்களோவென்று பார்ப்பதில் கண்ணும்கருத்துமாய் இருக்கக்கடவோம்.

மிகவும் அருமையான பிள்ளைகளே! நமது மேற்றிராசனத்தில் சங்கிலித்தொடர்போன்று இணைக்கப்பட்டுள்ள பாடசாலைகளைக்கட்டவும், அவைகளைப் பாமரிக்கவும் உங்கள் உத்தமமூதாதைகள்செய்த அரும்பெரும் தியாகங்களை நீங்கள் நன்கறிவீர்களே! அவைகளின்பலனை இன்று அனுபவிக்கிற நீங்கள்அவர்களின் உத்தமமாதிரிகையைப் பின்பற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். தற்போதுள்ள பாடசாலைகளைத் திருத்தவும், தகுதியுள்ள வறியபிள்ளைகள் கல்விகற்க வசதிகள் செய்யவும், தேவையான இடங்களில் புதியபாடசாலைகளை நிறுவவும் பண உதவி தேவைப்படுகின்றது. இதற்காக நமது மேற்றிராசனத்தில் "வித்தியாதனம்" (நிதி) ஒன்றை ஆரம்பித்திருக்கின்றோம். உங்கள்பிள்ளைகளும், அவர்களின்சந்ததியாரும் இதனுல்அடையவிருக்கும் நன்மைகளைஉணர்ந்து, பரித்தியாகங்கள்புரிந்து, உதாரசிந்தையுடன் உதவிசெய்யுமாறு உங்கள் எல்லோரையும் வினயமாய்க்கேட்கின்றோம். ஆகையால் நமதுபாடசாலைகளின் நன்மைக்காக வருடந்தோறும் "குருத்தோலை" ஞாயிறன்று பூசைநேரத்தில் விசேஷ தண்டல் செய்யும்படி (தருமப்பணம் சேர்க்கும்படி) கட்டளை இடுகின்றோம். தனித்தனிக் கொடைகள் எவ்வேளைகளிலும் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்றிராசன வித்தியாநிதியை உங்கள் [illegible]லும் நினைத்துக்கொள்ளுங்கள். சருவேசுரன் உங்களுக்கு இவ்வுலகசெல்வத்தை அபரிமிதமாகத் தந்திருந்தால் அதில் ஒரு பங்கை நமது மேற்றிராசனவித்தியாநிதிக்குக் கொடுத்துதவுங்கள். உங்கள் பணக்காரச் சிநேகிதர், இனசனரைக் கல்விவிருத்திக்காக உதாரகுணத்தோடு உதவிசெய்யும்படி ஏவித்தூண்டிவிடுவதோடு அதைஉடனே மேற்றிராசன பொக்ஷாதிபருக்கு அனுப்பும்படியும் செய்யுங்கள்.

## 9. தலைக்கட்டு

யேசுநாதரில் நமக்கு மிகவும்பிரிய சகோதரரே, பிள்ளைகளே! நீங்கள் உடனடியாக அவசியம்கவனிக்கவேண்டிய சிலவிஷயங்களை இங்கு சுருக்கமாகக் குறித்துள்ளோம். இப்பொழுது நம்முடையபரலோகதாயாரான கன்னிமரியம்மாளின் மாசற்ற இருதயத்தின் வழியாய் யேசுநாதரின் அதிபரிசுத்த இருதயத்தைநோக்கி நமதுகரங்களையும், இருதயகமலங்களையும் மன்றாட்டமாய்எழுப்பி, நமதுபாடசாலைகள் மேலும், பிள்ளைகள்மேலும் தமது கருணைநிறைந்த அன்பையும், வரப்பிரசாதங்களையும் பொழிந்தருளும்படி இரந்துகேட்போம். உங்கள் மேலும் அவர் தம்முடைய தெரியலான ஆசீர்வாதங்களைப்பொழிந்து அவைகள் உங்களுடன் என்றென்றும் நிலைக்கச் செய்வாராக! ஆமென்.

இஃது யாழ்ப்பாணத்திலே 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் 15-ந் திகதியன்று நமதுமுத்திரையுடனும், கைச்சாத்துடனும், கருமாதிகார சுவாமியவர்களின் சாட்சியத்துடனும் விடுக்கப்பெற்றது.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

மேற்றிராணியாரின் கட்டளைப்படி
எஸ். இம்மனுவல் சுவாமியார்
கருமாதிகாரி

## கம்யூனிஸ்தர்களின்திட்டம்

"தொழிலாளர் இயக்கத்தைக் கம்யூனிஸ்தர்களும், அவர்களுடைய சகாக்களும் தடைசெய்து முடமாக்கித் தொழிலாளர்களுக்குக் கஷ்டத்தைக் கொண்டுவந்துள்ளார்கள். இலங்கையின் நன்மைக்காகக் கம்யூனிஸ்தர்கள் உழைக்கவில்லையென நான்திட்டமாக உங்களுக்குக்கூறுவேன். அவர்களுடையதிட்டம் உலகமெங்கும் செறிந்திருக்கிறது. அடக்கியாள்வதும், புரட்சியுமே அவர்களின் திட்டம்" என்று வெலிகாமத்திலே ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகரை ஆதரிக்கும் கூட்டம் ஒன்றில் அரசாங்கமந்திரி திரு. ஏ. ஈ. குணசிங்கா அவர்கள் தலைமைவகித்துப் பேசியபோது கூறியிருக்கின்றார்.

## கிராமத்தொண்டரின்சேவை

மன்னூர்ப்பகுதிக் கிராமமுன்னேற்ற சங்கங்களின்சரித்திரத்தில்முதன்முறையாக அங்குள்ள கிராமத்தொண்டர்கள் இந்தியாவிலிருந்து களவாகவந்து குடியேறுகிறவர்களைக் கண்டுபிடிப்பதிலே அரசினருக்குத் துணைசெய்ய முன்வந்திருக்கிறார்கள். சமீபத்திலே அவர்கள் மன்னூரிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள தல்லுக்குடியிருப்பிலே களவில்வந்திறங்கிய 54 பேரைக் கைதுசெய்துஒப்படைத்திருக்கிறார்கள். குடியேற்ற - வெளியேற்ற கட்டுப்பாட்டு அதிகாரியான திரு. ஆர். எல். ஆர்னல்டா அவர்கள் இத்தொண்டர்களைப் பாராட்டி, அவர்கள் இவ்வாறு கைதுசெய்யும் ஒவ்வொருவருக்கும் 5 ரூபா வீதம் கிராமமுன்னேற்றசங்கங்களுக்கு வெகுமதிசெய்வதாக வாக்களித்திருக்கின்றார்.

## நேர்த்தியின் பூர்த்தி

பண்டத்தரிப்பில் உள்ள பத்திமாகிரியிற் கோயில்கொண்டெழுந்தருளியிருந்து எண்ணிறந்த அற்புதங்களைச் செய்துவருகிற பாத்திமாநாயகியின் கிருபாகடாட்சத்தால் நான் விரும்பிக்கேட்ட காரியம் கிடைத்தது. நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன். M. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே!

சென்றவாரம் இப்பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த போட்டியைக் கவனித்தீர்களா? நீங்கள் உத்தானத் திருநாளுக்கு எப்படி ஆயத்தப்படுத்த வேண்டுமென்ற விஷயத்தைப்பற்றி நூறுசொற்களுள் ஒருகட்டுரை எழுதவேண்டும். இதை எழுதுவதற்கு விடுதலைகாலத்தில் உங்களுக்குப் போதியநேரம் இருக்கும்.

உங்களிற்சிலருக்கு இப்பொழுது விடுதலையாய் இருக்கும். வேறுசிலருக்கு அடுத்தகிழமை தொடங்குமாக்கும். இந்த நேரத்தை வீண் சோம்பற்தனத்திற் செலவழிக்க வேண்டாம். விளையாட்டு, வேலை, சொற்படிப்பு என்பனவற்றில் செலவழியுங்கள்.

உங்கள் ஞானக்கடமைகளைச் சரிவர நிறைவேற்றுங்கள். பரிசுத்தவாரத்தை விசேஷமாய், பெரியவியாழன், பெரிய வெள்ளி ஆதியாம்நாட்களை யேசுநாதருடைய பாடுகளைத் தியானிப்பதில் செலவழியுங்கள். அப்பொழுது உத்தானதினச் சந்தோஷங்களை அநுபவிப்பீர்கள். சுபம்!

உங்களன்புள்ள அண்ணா.

## யேசுநாதர் கபர்நாகூம்

பட்டணத்தை அதிகம் நேசித்திருப்பார். (நாகூம் தீர்க்கதரிசியின் கிராமம், அல்லது ஆறுதலின்கிராமம் என்பது கருத்து) அவர் அங்கு அநேக அற்புதங்களைச் செய்தார். தேவநற்கருணையை வ்ாக்குப்பண்ணிய பிரசங்கமும் அவ்விடத்தில் தான். கிறீஸ்துநாதர் கலிலேய பகுதியில் இருக்கும்பொழுது திபேரியாக் கடலோரத்திலிருந்த இப்பட்டணத்தைத் தமது தலைமைத் தானமாகப் பாவிப்பார். கைத்தொழிலும், வர்த்தகமும் நிறைந்த இடம். வர்த்தகர்கள் தங்க வசதியும் இருந்தது.

அங்கு சந்தைக்கூட்டத்தில், அல்லது யூதருடைய செபக்கூடத்தில் யேசுநாதர் போதிப்பார். அதைககேட்டவர்கள் "இவர் அதிகாரத்துடன் பேசுகிறார்" என்று ஆச்சரியப்படுவார்கள். தர்க்கங்களில் தெளிவான மறுமொழி கொடுப்பார். வேதாகம வாக்கியங்களை அடிக்கடி உபயோகிப்பார். புத்திக்கூர்மை காண்பிப்பார். இவ்வுலகத்துக்கும், மறுஉலகத்துக்குமுரிய கருமங்களைப்பற்றித் தெளிவாகவும், சுருக்கமாகவும் விளங்கப்படுத்துவதைக் கேட்ட சனங்கள், தமக்கேற்ற போதகர் என்று சந்தோஷப்பட்டு அவரைப் பின்பற்றுவார்கள்.

ஒரு ஓய்வுநாளில் செபக்கூடத்தில் எல்லோரும் மவுனமாய்ப் பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். திடீரென ஓர் கூக்குரல் அமைதியைக் குலைத்தது. பேய்பிடித்த மனிதன் ஒருவன் அங்கு நுழைந்துவிட்டான். பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்க அந்தப்பிசாசுக்குச் சகிக்க முடியவில்லை, ஒரே கூப்பாடுபோட்டது. "எங்களைச் சும்மாவிடும்! நசரேத்து யேசுவே உம்மோடு எங்களுக்கு என்ன தொடர்பு? நீர் யார் என்று தெரியும்; சருவேசுரனுடைய பரிசுத்தவான்." யேசுநாதர் அவனை அதட்டினார்: "சத்தங்காட்டாமல் அவனை விட்டு வெளியேறு" என்றார். அசுத்த அரூபி அப்படியே செய்தது. ஆயினும் அம்மனிதனைத் தூக்கி எறிந்துவிட்டது. தோற்கடிக்கப்பட்ட கூளியின் ஆற்றாததனம். ஆனல், மனிதன் நோவு இல்லாமல் எழுந்திருந்தான்.

**பேதுருவின் மாமியார்:** ஆண்டவர் செபக்கூடத்தை விட்டு வெளியேறினர். அவர்செய்த புதுமையைக் கண்டவர்கள் ஆச்சரியவசத்தரானர்கள். அவருடைய மகிமை பெருகியது. அவர் விரும்பியிருந்தால் அவ்வூர்ப் பெரியமனிதர் தங்கள் வீட்டில் அவரை உபசரித்திருப்பார்கள். ஆனல், அவர் சீமோன் பேதுரு வீட்டிற்குப் போனர். அங்குள்ள எல்லோரும் கவலைதோய்ந்திருந்தார்கள். "சீமோனின் மாமியாருக்குக் கடும்சுரம் கண்டிருந்தது." அவளைச் சொஸ்தப்படுத்தும்படி சீஷர் கேட்டனர். யேசுநாதர் அப்படியே செய்தார். பூரண சௌக்கியம் அடைந்தாள். உடனே எழுந்து வந்தவர்களை உபசரிக்க விரைந்தாள். ஊர்முழுவதும் இச்செய்தி பரந்தது. எல்லோரும் யேசுநாதரைப்பற்றிக் கதைத்துக்கொண்டார்கள். ஓய்வுநாளானபடியால் சற்று அமைதியாய் இருந்தார்கள்.

### வேறு அற்புதங்கள்

பொழுது பட்டதும் ஓய்வுநாள் முடிந்தது. சனங்கள் தங்கள் வீடுகளிலுள்ள நோயாளரைக் கிறீஸ்துநாதரிடம் கொண்டுவந்தார்கள். "ஒவ்வொருவரையும் தொட்டுச் சொஸ்தப்படுத்தினர்." பேய்கள் பிடித்திருந்த அநேகர் விடுதலையடைந்தனர். 'நீர் தேவகுமாரனென்று' ஓலமிட்டுக்கொண்டு அநேகரிடமிருந்து ஓடிப்போயின. பாருங்கள், கிறீஸ்துநாதர் நோயாளர் மட்டில் எவ்வளவு அநுதாபங் காண்பிக்கிறார்; பாரபட்சமின்றி எல்லோரையும் சொஸ்தப்படுத்துகிறார்.

மேற்கூறியவை கிறீஸ்துநாதர் ஒருநாளை எப்படிச் செலவழித்தார் என்று காட்டுகின்றன. நாள்முழுவதும் அவர் செய்தவற்றைக் காண்கிறோம். காலையில் செபக்கூடத்திற் போய்ப் பிரசங்கித்து விட்டு, பேய்பிடித்தவனைச் சொஸ்தப்படுத்தினர். பின்பு மதியப் போசனத்துக்காக பேதுருவீட்டிற்குப் போனர். அங்கு பேதுருவின் மாமியாரைச் சொஸ்தப்படுத்தினர். பொழுது பட்டபின் இரவில் அதிகநேரம் நோயாளரை வரவேற்று அவர்களைக் குணப்படுத்தி அனுப்பினர்.

கபர்நாகூம் ஊரவர்கள் தங்கள் வருத்தக்காரரைக் கிறீஸ்துநாதரிடம் கொண்டுபோனதுபோல, என்னுடைய துன்பங்களையும் அவரிடம் கொண்டு போவேன்.

### புதுமைகள்

மூன்றுவிதமான புதுமைகள் உண்டு.

1-வது சடப்பொருட்களின்மேல் செலுத்தும் அதிகாரம். உதாரணமாக, தண்ணீரை இரசமாக்கியது; அப்பங்களையும மச்சங்களையும் பலுகச்செய்தது; தண்ணீரில் அமிழ்ந்தாமல் அதன்மேல் நடந்தது.

2-வது உரோகங்களைக் குணமாக்கியது. பத்துக் குட்டரோகிகளைச் சொஸ்தப்படுத்தியது; திமிர்வாதக்காரன் குணமானது; குருடர் பார்வையடைந்தது; கொடிப்பொழுதில் கடுங்காய்ச்சலைச் சொஸ்தப்படுத்தியது; ஊமைகளுக்கு நாவரமும், செவிடருக்குக் கேள்விவரமும் கொடுத்தது.

3-வது மரித்தோரை உயிர்ப்பித்தது. இவைகளிற் பிரதானமானது, லாசறுவை உயிர்ப்பித்தது. எல்லாவற்றிலும் மேலானது, யேசுநாதர் தமது தெய்வீகத்துக்குச் சாட்சியாக மரித்தபின் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தது.

அவிசுவாசிகள் யேசுநாதர் புதுமைகள் செய்யவில்லையென்றோ அல்லது அவைகள் இயற்கைக் காரணங்களால் ஆனவையென்றோ சொல்லிமறுக்கிறார்கள். அப்படியாயிருந்தால் தேவஏவுதலால் சுவிசேஷங்களை எழுதினவர்கள் பொய்யைச் சொல்லுகிறவர்களாவார்கள். எவனாவது தான் சொன்ன பொய்யை நிரூபிக்கத் தன்உயிரைத் துறப்பானா? மத்தேயு, மார்க், லூக்கா, தாங்கள் எழுதின சுவிசேஷத்துக்காக உயிர் துறந்தார்கள். தேவவல்லமையின்றிப் புதுமை இல்லை.

## உங்களுக்குத் தெரியுமா?

[1] படகு, குருத்தோலை, நங்கூரம், மச்சம், மாடப்புறா, மோதிரம்ஆதியன எவற்றிற்குச் சின்னங்கள்?

படகு—திருச்சபைக்கு.

குருத்தோலை— வேதசாட்சிக்கு.

நங்கூரம்—நம்பிக்கைக்கு.

மச்சம்—கிறீஸ்துநாதருக்கு.

மாடப்புறா— சமாதானத்துக்கு.

மோதிரம்—நித்தியத்துக்கும், மெய்விவாகத்திற்கும்.

[2] செம்படவனின் கணையாழி என்பதுஎன்ன?

இது பாப்பரசரது சின்னங்களில்ஒன்று. இதனை அர்ச். பேதுருவானவர் அணிந்திருந்ததாக ஒரு சரித்திரமுண்டு. ஆனல், அதற்கு யாதொருஆதாரமும் இல்லை. ஆயினும் அர்ச். பேதுருவானவர் ஓர் படகிலிருந்து மீன்பிடிப்பதுபோல அதில் செதுக்கப்பட்டிருப்பதினல் அதற்குச் "செம்படவனின் கணையாழி" எனப் பெயர்வரலாயிற்று.

[3] திவ்வியபூசைப்பலி தற்போது எத்தனை பாஷைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

பதினெட்டுப்பாஷைகளில்ஒப்புக்கொடுக்கப் படுகிறது. கத்தோலிக்க திருச்சபையிலே 1. லத்தீனிய, 2. கிரேக்க, 3. சிலோவோனிக்கிய. 4. அராபிய, 5. சீரிய, 6. ஆர்மீனிய, 7. மைக்கிய (ஹங்கேரிய), 8. ரூமேனிய, 9. ஜியோர்ஜிய, 10. கொப்திக்க, 11. ஜீஸிய (பழைய எத்தோப்பிய), 12. லெற்றிஷிய பாஷைகளிலும்.

கத்தோலிக்க திருச்சபைக்கு வெளியே(பிரிவினைச்சபைகளில்) பலனுள்ளனவாய் 1. ஆங்கில, 2. அல்பானிய, 3. பின்னிஷிய, 4. எஸ்தோனிய, 5. மலையாள பாஷைகளிலும், 6. சீனப் (பைசான்ரின் பூசை) பாஷையிலுமாகும்.

[4] பின்னற் சொல்லப்படும் ஏழு அர்ச்சியசிஷ்டர்கள் பாரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிவீர்களா?

அர்ச். சீயென்னு கத்தரீனம்மாள்—ஒரு குடும்பத்தில் பிறந்த 22 பிள்ளைகளில் 21-வதுபிள்ளை.

அர்ச். சிலுவை அருளப்பர்—ஒரு குடும்பத்தில் பிறந்த 16 பிள்ளைகளில் ஒருவர்.

அர்ச். லொயலா இஞ்ஞாசியார்—11 பிள்ளைகளில் அதிகம் இளையவர்.

அர்ச். பெரிய தெரேசம்மாள் (அவிலா)-9 பிள்ளைகளில் 3-வது பிள்ளை.

அர்ச். குழந்தையேசு தெரேசம்மாள் —9 பிள்ளைகளில் அதிகம் இளையபிள்ளை.

அர்ச். பிரான்சீஸ் சலேசியார்—8 பிள்ளைகளில் மூத்தவர்.

அர்ச். கனிசியஸ் அருளப்பர்-எட்டுப்பிள்ளைகளில் ஒருவர்.

[5] அர்ச். ஜெர்த்துருத்தம்மாள் ஞாயிற்றுக்கிழமை பூசை காண்பதைப்பற்றி யாதுசொல்லுகின்றாள்?

வாரந்தோறும் தவறாது ஞாயிற்றுக்கிழமையிலே பக்தியோடு திவ்வியபூசைகாண்கிறவன் எவ்

(தொடர்ச்சி முன்பத்தியிற் பார்க்க)

வளவுபெரிய பாவியாய் இருந்தபோதிலும் ஒருநாள் மனந்திரும்பி நல்லகிறீஸ்தவனகும் பாக்கியம் பெறுவானென்று சொல்லுகின்றாள்.

[6] மார்க்கோனி பிரபுவைப் பற்றிய விசேஷம் என்ன?

இவர் ஓர் இத்தாலிய கத்தோலிக்கவிஞ்ஞானியாவர். இவர் கம்பியில்லாத்தந்தியை 1896-ம் ஆண்டு கண்டுபிடித்தார். வானெலி(Radio)யைக் கண்டுபிடித்தவரும் இவரே.

[7] அமெரிக்கஐக்கியதேசத்தின் 33-வது ஜனதிபதி யார்?

1945-ம்ஆண்டு சித்திரை 12-ந் திகதிமுதல் அமெரிக்க ஜனதிபதியாய் இருந்துவருகிறவரான திரு. ஹரி ட்றூமன் அவர்களே. இவருடைய ஆட்சிகாலம் வருகிற தைமாதம் முடிவடையவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாசாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியடிக்கப்பெற்ற கற்றாணின் பகுதியும், திருச்சிலுவைக்குமேலாகப் பிலாத்துவினால் வைக்கப்பட்ட மேல்வாசகப் பலகையும், அவர் காடியை ருசி பார்க்கும்படியாகத் திருஉதடுகளில் வைக்கப்பட்ட கடற்பஞ்சும் ரோமாபுரியிலே இருந்துவருகின்றன.

**சவேரியாரின் வலதுகரம்.**

அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் வலதுதிருக்கரமானது அடுத்த கோடைகாலத்திலே பிறெனீஸ்மலையிலுள்ள சவேரியார்குடும்பத்தின் புராதன கோட்டைக்குக் கொண்டுபோகப்பெற்று, ஸ்பெயினின் அநேக பகுதிகளிலிருந்து வந்துகூடவிருக்கும் யாத்திரிகர்களின் வணக்கத்துக்கெனக் காட்சிக்குவைக்கப்படவிருக்கிறது. அர்ச். சவேரியார் பரமபதம் அடைந்த நாலாம் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டங்கள் ரோமாபுரியிலே இம்மாசத்தின் இரண்டாவதுவாரத்தில் ஆரம்பமாயின. ஐரோப்பாவின் அநேகபகுதிகளிலிருந்து அங்குகொண்டுபோகப் பெற்றிருந்த வலதுதிருக்கரம் உட்பட அவரது திருப்பண்டங்கள் ஜேசு எனும்தேவாலயத்தில்தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அர்ச்சியசிஷ்டரின் திருமேனி கோவைநகரிலுள்ள பொம்ஜேசு ஆலயத்தில் இன்னுமே அழியாமல் இருந்துவருகிறது.

**மஸ்கோவில் பாத்திமாசேத்திரம்**

ருஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோநகரிலுள்ள பாத்திமா திருசேத்திரம் ஒன்றில் கடந்த இருவருடகாலமாக ருஷியாவிற்காகச் செபங்கள்செய்து ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள சுரூபமானது பாத்திமாவிலுள்ள ஆதியான சுரூபத்தினதும், உலகமுழுவதுஞ்சுற்றி எடுத்துக்கொண்டு போகப்பெற்ற பேரான "யாத்திரைக்கன்னிகை"யினதும் அதேபிரதிரூபமானது. 1947-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 13-ந்திகதி பாத்திமாவிலே தாசில்வா மேற்றிராணியாரால் ஆசீர்வதிக்கப்பட்டது. அமெரிக்க மோட்சாரோபணமாதா சபையைச் சேர்ந்த வண. ஆர்தர் பிறசாட் சுவாமியார் மஸ்கோநகரிலுள்ள பிறநாடுகளின் இராஜீயப்பிரதிநிதிகள், ஸ்தானீகர்களின் கத்தோலிக்க கோவிலிலே ஆராதனைவழிபாடு நடத்துமாறு 1950-ம்ஆண்டு தைமாசம் அங்கு ஓர் விமானத்தில் போனபோது அச்சுரூபத்தையும் தம்முடன் எடுத்துச்சென்றார்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயம், வேளாங்கண்ணிமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். பிலோமினம்மாள், அர்ச். ஆரோக்கியநாதர், முத். மாட்டின் தெ போர்றஸ், சகல அர்ச். மோட்சவாசிகள் நாமத்தினால் யான் கேட்ட மன்றாட்டின்படி எவ்விதவைத்தியத்தினாலும் குணமுறாத பத்தா தற்பொழுது சொஸ்தமடைந்து விட்டதால் நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். அவர்கள்நாமங்கள் புகழப்படுவதாக!

மிருசுவில் லில்லி நாதன்

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! ஒருசங்கதி. அன்றொருநாள் ஆலங்குளச்சந்திக் கடையிலிருந்து ஓர் ஏழை பின்வருமாறு பெருமூச்சுவிட்டுப் புலம்பினான். அதாவது, காடுகளெல்லாம் நடைகட்டுகின்றனவே! அவ்விடங்களை நெற்காணிகள் வந்து நிரப்புகின்றனவே! இவற்றின் நடுவே குச்சுவீடுகள்எழும்ப இடம் இல்லாவிட்டாலும் ஒடுங்கிப்பதுங்கி ஓடிவருகின்றனவே தபால்ஆபீஸ்களும், பாடசாலைகளும். கள்ளத்தோணிக்காரரைக் கண்டால்பிடியுங்களெனக் கத்துகின்றனரே ஒருபாலார். அவர்கள்பிள்ளைகளின் உதவியால் கல்விச்சாலைகளை நிறுவுகின்றனரே மறுபாலார். கூப்பன் இல்லாதோரைப் பிடியும் என்கின்றனரே ஒருசிலர். அப்படிப்பட்டவர்களின் பிள்ளைகளைநம்பிப் பாடசாலையில் அவர்களைச்சேர்த்துச் சராசரிகூட்டி வருகின்றனராமே மறுசிலர். இவர்கள் வரவால் யூனியர்பாடசாலைஆக்கக் கங்கணங்கட்டுகின்றனராமே இன்னொருபாலார். நீதிநிறைந்தஆட்சிக்கு இது தகுதியாகுமா?

**சிறுபோகக் கூட்டம்:—** இக்கூட்டம் சென்ற 28-ந் திகதிகாலை உயிலங்குளக் கிராமக்கோட்டு வங்களாவில் மன்னார் உதவிஏசன்றர் திரு. ஈ. ஜீ. மொறக்கொட அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெருந்தொகையான கமக்காரரும், கமவிதானைமாரும், நீர்ப்பாசன உத்தியோகஸ்தரும், பிறரும் அதற்குச் சமுகமளித்திருந்தனர். கூட்டத்தின் ஆரம்பத்திலே காலஞ்சென்ற உத்தமபிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களுக்கு மரியாதை செலுத்துமுகமாக மூன்றுநிமிஷநேரம் மௌனம் சாதிக்கப்பட்டது. அப்பால் இம்முறை சிறுபோகம் விளைவிப்பது ஆறுக்கொன்று வீதமெனவும், கூடிய கெதியில் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுக் கூட்டம் முடிவெய்தியது.

**கோடுரக் கொலை:—** மணல்மோட்டை எனுங்கிராமத்தில் சென்ற 20-3-52 வியாழக்கிழமை துரைச்சாமி எனும் ஒருவன் அவ்வூரில்வசித்துவந்த மாரியாயிஎன்னும் பெண்ணையும், சுப்பிரமணியம்என்பவனையும் துப்பாக்கியால் சுட்டானாம். மாரியாயி உடனே மரணமாக, சுப்பிரமணியம் காலொன்று சேதமுற்றானும். மரணமானபெண் வீட்டு முற்றத்தில் தேங்காய்துருவிக் கொண்டிருந்தாளாம். பிந்தப் பொலிசாரால் சுப்பிரமணியம் மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டான் என்று சொல்லப்படுகின்றது. துப்பாக்கி மிதமிஞ்சிப் புழங்குவதே இப்பகுதியில் கொலைநிகழ்வதற்கு முக்கியகாரணமெனச் சிலர்கருதுகின்றனர்.

**துவரங் கேணியூர் :—** உயிலங்குளத்திற்கும், வங்காலைக்குமுள்ள குறுகியபாதையின் நடுவே இவ்வூர்இருக்கின்றது. இதன் அண்மையில் மண்டுக்குமிண்டான்என்னும் சிறுகுளமுமுண்டு. இந்தத்துவரங்கேணியூரில் புராதன பெருமையுள்ள அர்ச். அந்தோனியார் ஆலயம்இருக்கிறது. இவ்வாலயம் உயிலங்குளம், முதலைகுத்திக் கத்தோலிக்கர் சிலரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இக்கோயில் தள்ளாடி, அந்தோனியார்கோவில் போன்றதேயாயினும் தெருவுக்கண்மையில் இல்லாதமையால் சனப்புழக்கத்தில் சிறிது குறைவுபட்டதாய் இருக்கின்றது. இக்குறையை நீக்க இப்போது கிராமச்சங்கத்தால் ஓர் புதியதெரு திறக்கப்படவிருக்கிறது. எப்படியாயினும் இக்கோயில் மிகவும்திருப்திகரமாகப் புதுக்கித் திருத்தப்பட்டிருப்பதைக் காண்பது பெரிதுஞ் சந்தோஷம் தருவதாகும். பழையசில மாதோட்டப்புலவர்களின் பாடல்களிலும் இக்கோவில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடற்பாலது.


# விற்பனைக்கு இருக்கின்றன

## கத்தோலிக்கு கீர்த்தனைமாலை

PART 1.

லத்தீன் கீர்த்தனைகள்

பிரதிவிலை 2 ரூபா 25 சதம்

* * *

யேசுநாதரின் சுவிசேஷம்

அல்லது

நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை

Harmony of the Four Gospels

புதிதாக வெளிவந்திருக்கும் ஓர் அருமையான நூல்

பிரதிவிலை 2 ரூபா 95 சதம்

* * *

பூசை உதவிமந்திரம்—பிரதிவிலை சதம் 40

* * *

செபச்செண்டு—பிரதிவிலை ரூபா 1

* * *

திவ்விய பூசையின் சாதாரண செபங்கள்—பிரதிவிலை சதம் 60

எல்லாவற்றிற்கும் தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்கும் இடம் :

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்

யாழ்ப்பாணம்.


**விவசாயப் பொருட்காட்சி:—** இப்பொருட்காட்சி வருகிறவைகாசிமாசம் 2-ம் 3-ம் 4-ம் திகதிகளில் முருங்கனில் நடைபெறுமென மன்னார்உதவிஏசன்றரும், விவசாயசங்கத் தலைவருமான திரு. ஈ. ஜீ. மொறக்கொட அவர்களால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரமூலம் அறியக்கிடக்கின்றது. இக்காட்சியிலே நெல்வகைகள், சிறுதானியம், அவரைவகை, எண்ணெவகை, கிழங்குவகை, வசனைத்திரவியங்கள், காய்கறிவகை, பழவகை, கிருஷிகக்கருவிகள், கோழி, முட்டை, வாத்து, ஆடு, எருமைமாடு, பசுமாடு, தேன், நெய், தயிர் என்பன இடம்பெறுமெனத் தெரியவருகிறது. அதனால் இதுவிவசாயிகளுக்கு உற்சாகமளிக்கக் கூடியதாகும்.

**துக்கமும் சந்தோஷமும்:—** இன்பமும்துன்பமும் விரவிவருவது உலக இயற்கைஅன்றோ! சென்ற 22-3-52 பிற்பகல் வானொலிமூலம் எமது தேசப்பிதா பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் மரணத்திரையில் மறைந்த செய்தி சகலகிராமவாசிகளையுமே கலங்கச்செய்வதாயிற்று. இப்பெரியாரது மறைவின்துயரால் கலங்கிக்கொண்டிருந்த மக்கள் அவரின்மைந்தர் திரு. டட்லி சேனநாயகஅவர்கள் பிரதமரானதால் ஒருவாறுதேறிச் சந்தோஷங்கொள்ளலானார்கள்.

**மரியாயின் சேனை:—** இதனால் லட்சக்கணக்கான ஆன்மநன்மைகள் உண்டாயினஎன்பது சகல விசுவாசிகளும் நன்கறிந்ததே. இது உயிலங்குளக் கத்தோலிக்கபாடசாலையிலும் வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் விமரிசையாக நடைபெற்றுவருவது போற்றப்படத்தக்கதாகும். இந்த அருமையானசபை மறு பாடசாலைகளிலும், விசாரணைப்பங்குகளிலும் ஸ்தாபிக்கப்பட்டு இனிதேநடைபெறுமானால் வரக்கூடியநன்மை பெரிதாகுமன்றோ!

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திவ்வியயேசுவின் இரக்கத்தினாலும், பரிசுத்த பாத்திமாமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் இவர்களுடைய வேண்டுதலினாலும் என்மகள் ஒருவிதகஷ்டமுமின்றிப் பெற்றுப்பிழைத்தாள். யேசுவின் திவ்வியஇருதயம் இக்குடும்பத்துக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்படியாய்ப் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

இராமபுரம் வி. ஆரோக்கியம்

* * *

அளவற்ற தயாளநிறைந்த யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், அர்ச். ஒதிலியம்மாளின் அனுக்கிரகத்தாலும் எனது கண்ணிலேற்பட்ட சுகவீனம் எவ்வித வைத்தியமுமின்றிச் சுகமடைந்தது. அர்ச். ஒதிலியம்மாளின்நாமம் என்றென்றும் புகழப்படுவதாக. M. M.

## அறிவித்தல்

இல. 8722

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

1. சுதுமலை, செல்லையா சின்னையா
2. ஆனைக்கோட்டை, தொம்மை நீக்கிலாப்பிள்ளை
3. ஷை ஊர் பாவிலு சூசைப்பிள்ளை
4. கொக்குவில்மேற்கு, குருசு வரப்பிரகாசம் — வழக்காளிகள்

எதிராக

மானிப்பாய்க் கிராமச்சங்கம் — எதிரி

சுதுமலை, ஆனைக்கோட்டை, கொக்குவில் மேற்குக்கிராமங்களில் வசிக்கும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு.

இத்தால்அறிக:—

மேற்கூறிய வழக்காளிகளால் தங்கள் சார்பாகவும் மேற்கூறிய எல்லைக்குளிருக்கும் ஏனைய மீன்பிடித்தொழிலாளர் சார்பாகவும் ஆனைக்கோட்டைக் கடற்கரையில் "கரையாம்பிட்டி அல்லது காக்கைதீவு அல்லது வல்லவட்டன்திறை" என்னும் பகுதியில் வள்ளங்களைக் கொண்டுவந்துவிடும் உரிமையையும், வலைகாயப்போடும் உரிமையையும், மீன்பிடித் தொழிலுக்குரிய மற்றும் உரிமைகளையும், மேற்படி எதிரிக்குமாறாகத் தீர்ப்பளிக்கவும், தற்போது எதிரி கட்டுவிக்கும் கட்டிடத்தை இடிக்கவும் இவ்வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

மேற்கூறிய எதிரிசார்பில் மேற்கூறிய கிராமவாசிகளின்சார்பாக வழக்குத் தொடர்வதற்கு இக்கோடு 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் 26-ந் திகதி உத்தரவளித்திருக்கின்றது.

1952-ம் ஆ மார்ச் மீ 28-ந் திகதி

கோட்டுக் கட்டளைப்படி

**T. Sivasubramaniam**

சக்கடத்தார்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 3-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org